பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 11 திங்கட்கிழமை (24.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 119

# இலங்கை நிலைமையைக் கண்டறிய பிரிட்டிஷ் எம்.பிக்கள் குழு வருகிறது

## கிழக்குக்கும் அது விஜயம் செய்யும்

கொழும்பு, மார்ச் 24

**இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து நேரில் கண்டறிவதற்காக பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.**

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய பிரமுகர்களை இங்கு சந்திக்கவுள்ள இலங்கைக்கான அனைத்துக் கட்சி பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கிழக்கு மாகாணத்திற்கும் நேரடியாக விஜயம் மேற்கொள்ளவுள்ளது.**

பிரிட்டிஷ் நாடாளுமன்றக்குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அதே காலப் பகுதியில் இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்த பிரிட்டனின் அறிக்கையும் வெளியாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிடான்பினால் வெளியிடப்படவுள்ள இந்த அறிக்கையில் இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்துக் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படலாம் என இராஜதந்திர வட்டாரங்கள் எதிர்வுகூறியுள்ளன.

பிரிட்டனிற்கு கடந்த வாரம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அனைத்துக் கட்சிக் குழுவில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரைச் சந்தித்து உரையாடியுள்ளார். கிழக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தை மீள ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவர் தெளிவுபடுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சில வருடங்களுக்கு முன்னர் அனுசரணை முயற்சியில் ஈடுபட்ட கொன்சவேர்ட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லியாம் பொக்ஸையும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் சந்தித்துள்ளார். லியாம் பொக்ஸும் இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம், உடுவிலில் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். மாவட்டத்தில் சுன்னாகம், கந்தரோடை மற்றும் உடுவில் ஆகிய பகுதிகளில் நேற்று அதிகாலையிலிருந்து நண்பகல் வரை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து கடும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். வீதிச் சோதனை மற்றும் வீடுவீடாகச் சென்று சோதனை நடத்திய இராணுவத்தினர் பொதுமக்களின் அடையாள அட்டைகளையும் பரிசோதித்தனர்.

நேற்று முன்தினம் காலை சுன்னாகம் மேற்கே உள்ள கந்தரோடைப் பகுதியில் இருக்கும் முருகமூர்த்தி ஆலயத்திற்கு அருகேதர்மராஜா ரகுபதி (வயது - 34) என்பவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்தே இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று சொல்லப்படுகிறது. (உ)

## சனியன்று நடைபெற்ற சமர்களில் 6 படையினர் உயிரிழந்ததாக அறிவிப்பு

### விடுதலைப் புலிகள் தரப்பில் 16 பேர் பலியாம்

கொழும்பு, மார்ச்.24

வடக்கின் போர் முன்னரங்க நிலைகளில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடுஞ் சமரில் ஆறு இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும், 29 பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மணலாறு கிரிபன்வெவப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமரில் விடுதலைப் புலிகள் ஏழுபேர் உயிரிழந்தனர் என்றும் தமது தரப்பில் மூன்றுபேர் உயிரிழந்தனர் என்றும் 11 பேர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - நாகர்கோவிலில் நேற்றுப் பகல் கடுஞ்சண்டை

யாழ்ப்பாணம், மார்ச் 24

முகமாலை, கிளாலி மற்றும் நாகர் கோவில் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளை நோக்கி நேற்று அதிகாலை முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது தாம் முறியடிப்புத் தாக்குதலை மேற்கொண்டனர் என்று புலிகள் தரப்பில் நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது. அப்பகுதியில் நேற்றுப்பகல் கடும் சண்டை நடந்ததாகக் கூறப்படுகிறது.

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் தமது பழைய தளங்களுக்குத் திரும்பிச் சென்றனர் என்றும் தாக்குதலின் பின்னர் மேற்கொண்ட தேடுதலின் போது இராணுவத்தினர் விட்டுச்சென்ற வெடிபொருள்களைத் தாங்கள் மீட்டனர் என்றும் புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது. (உ)

## மன்னாரில் 10 புலிகளின் சடலங்கள்

கொழும்பு, மார்ச் 24

மன்னார் முன்னரங்க நிலைகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்தவர்கள் எனக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் ஆறு பேர் உட்படப் பத்துப்பேரின் சடலங்களை இராணுவத்தினர் நேற்று நண்பகல் மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முடியும் வரை விசேட அதிரடிப்படை கிழக்கில் நிலைகொண்டிருக்க அனுமதியுங்கள்!

### ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் சங்கரி கோரிக்கை

கொழும்பு, மார்ச்.24

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவடையும் வரை அங்கு விசேட அதிரடிப்படை நிலைகொண்டிருக்க அனுமதிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

மிகவிரைவில் நடக்கவிருக்கும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக சில விடயங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

1960 முதல் நான்கு உள்ளூராட்சித் தேர்தல்களிலும் பத்துப் பொதுத் தேர்தல்களிலும் போட்டியிட்டுள்ளேன். சுமார் ஐம்பது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படையின் வெளியேற்றம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது - ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 24

கிழக்கில் இருந்து அதிரடிப்படையினர் வெளியேற்றப்பட்டமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கும் ஜே.வி.பி., பிரிவினைவாதம் தோற்கடிக்கப்படுபதற்கு முன்னர் அதிகாரப் பகிர்வினை முன்வைத்து கிழக்கு மற்றும் வடக்கில் மாகாணசபையை ஏற்படுத்த முயற்சிப்பது அரசின் முட்டாள்தனமான முடிவாகும் - என்றும் கண்டித்திருக்கிறது.

கிழக்கில் இருந்து விசேட அதிரடிப் படையினர் வெளியேற்றப்பட்டமையை ஆட்சேபித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே ஜே.வி.பி. இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலிருந்து அதிரடிப்படையினரில் 25 வீதமானோர் மட்டுமே வாபஸ்

### பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

அம்பாறை, மார்ச் 24

அம்பாறை மாவட்டத்தில் இருந்து 25 சதவீதமான விசேட அதிரடிப்படையினரே வாபஸ் பெறப்பட்டு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர்.

- இவ்வாறு பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் இருந்து விசேட

(12 ஆம் பக்கம் பார்க்க)

KOKUVIL HINDU COLLEGE
JHC Vs KHC BATTLE OF THE HINDUS
JAFFNA HINDU COLLEGE
OFFICIAL MEDIA SPONSOR: உதயன்
@ Kokuvil Hindu College grounds 29th & 30th of March 2008



தெல்லிப்பழையில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையத்துக்கு யாழ்.மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி விஜயம் மேற்கொண்டார். அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு அவர் புடைவைப் பொதியை வழங்குவதையும் அவர்களுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# சுன்னாகம் ரயில் நிலைய வீதியில் றோட்டரக்ட் கழகம் குப்பைத் தொட்டி நிர்மாணிப்பு

வலிவடக்கு,மார்ச்24

சுன்னாகம் றோட்டரக் கழகத்தினர் சுன்னாகம் ரயில் நிலைய வீதியில் குப்பைகள் பரவலாக கொட்டப்படுவதை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.

போக்குவரத்துச் செய்ய முடியாத அள விற்கு ரயில் நிலைய வீதியின் மறுபுறத்தே அமைந்துள்ள வீடுகளில் உள்ளவர்கள் தமது வீட்டின் கழிவுப்பொருள்களை ரயில் பாதையில் கொண்டு வந்து வீசி விட்டு செல்லும் நிலமை காணப்படுகின்றது.

நளாந்த பயன்பாட்டில் உள்ள இவ் வீதியில் செல்ல முடியாது பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கும் முகம் கொடுக்கவேண்டிய நிலமை காணப்பட்டது.

இதனைக் கவனத்தில் கொண்டு சுன்னாகம் றோட்டரக் கழகத்தினர் ரயில் நிலைய வீதியில் குப்பைகள் கொட்டுவதற்கு வசதியாக குப்பைத்தொட்டிகளை அமைத்து அதற்குள் குப்பைகளை போடும்படி வேண்டியுள்ளனர்.

தற்போது இக்குப்பை தொட்டிகளுக்குள் போடப்படும் குப்பைகள் சுன்னாகம் பிரதேச சபையினால் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (202-86)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னபாக்கியம் சிங்கராசா



தெல்லிப்பளை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா York இல் வசித்து வந்தவருமான அம்மாப்பிள்ளை என்று அழைக்கப்படும் திருமதி அன்னபாக்கியம் சிங்கராசா18.03.2008 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி அப்பாப்பிள்ளை-மாரிமுத்து தம்பதிகளின் மகளும், இராசம்மாவின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி தாமோதரம்பிள்ளை-பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சிங்கராசாவின் மனைவியும், காலஞ்சென்ற அருந்தவராஜா மற்றும் மகாலட்சுமி அம்மா, அருள்ராசா, புனிதராசா ஆகியோரின் தாயாரும், பரமேஸ்வரி, கனகலிங்கம், ஈஸ்வரி, பராசக்தி ஆகியோரின் மாமியும், அன்பரசி, பாலு, ரமேஸ், றுக்சன், லக்ஷன், நிவேதா, கமலராஜ் ஆகியோரின் பேர்த்தியும், சிங்கராசா, கமலாதேவி, நாகேஸ்வரி, யோகராசா, சத்தியராசா, மகேந்திரராசா, தங்கராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (Sherburne & Wellesley) 467, Sherbum estreet இல் அமைந்துள்ள Rosar - Morrison Funeranl home இல் நேற்று (23. 03.2008) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (24.03.2008) திங்கட் கிழமை காலை 10 மணியளவில் இல.600 Parliament Street அமைந்துள்ள St.James Cemetery இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு*
*416-784-0955, 416- 457-8228*

தகவல்:
புனிதராசா (மகன்)

### சுப்பிரமணியம் பிருந்தா (ஷாய்)

(யாழ் கனகரத்தின மகாவித்தியாலய மாணவி. 2006. GAQ 1ஆம் ஆண்டு மாணவி 2009)



பூம்புகார், அரியாலையைப் பிறப்பிடமாகவும் மாம்பழம் சந்தி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பிருந்தா (ஷாய்) 22.03.2008 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் திரு.திருமதி சுப்பிரமணியம்-யோகேஸ்வரி (யோகா) தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பிரசன்னா, பிரியங்கா (சஞ்சி), பிரணவா (விச்சு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2008) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாம்பழம் சந்தி,*
*அரியாலை.*

தகவல்:
சுப்பிரமணியம் (தந்தை, ஆட்டோ மணியம்), சுதா அண்ணன் (காரைநகர்)
(A)

### திருமதி சீவரத்தினம் இராசம்மா

கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் இராசம்மா நேற்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் சீவரத்தினம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகமுத்துவின் பாசமிகு புதல்வியும், சாந்தகுமாரி (கண்டி), ஜெயக்குமார் (நோர்வே), வசந்தகுமாரி, விஜயகுமார் (ஜேர்மனி), புஸ்பகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், இராமச்சந்திரன் (S.K.கொம்பனி, கண்டி), லீலாவதி (கனடா), சோமசுந்தரம் (கப்பல் பொறியியலாளர்), சிவகாந்தி (ஜேர்மனி), புஸ்பலிங்கம் (பிரதிக்கல்விப்பணிப்பாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜிதா (லண்டன்), சுஜிதா (கண்டி), பிரதீபா (கனடா), செந்தூரன் (கனடா), அபிராமி (கனடா), பிரகாஷ் (ஜேர்மனி), சதீசன் (ஜேர்மனி), சுரேந்தர், மிதுன், ஆதித்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹர்சன் (லண்டன்), நிரோசன் (லண்டன்), ஜதுர்சன் (கண்டி), கதீனா (கனடா), சௌமியா (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2008) திங்கட்கிழமை பி.ப. 1 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணிக்கு நவிண்டில் எள்ளங்குளம் மயானத்துனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''புஸ்பவாசா''*
*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.*
*தொ.பே. 0777 917704*

தகவல்:
இ.ஜெயக்குமார்(மகன்)
(B)

## பஸ் பழுதடைந்ததால் நெடுந்தீவுக்கான உள்ளூர் பஸ் சேவையும் ஸ்தம்பிதம்

நல்லூர், மார்ச் 24

நெடுந்தீவுக்கான உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த ஒரேயொரு இ.போ.ச. பஸ் வண்டியின் ரயர்கள் சேதமடைந்த தைத் தொடர்ந்து பஸ் சேவையும் நேற்று முன்தினம் முதல் ஸ்தம்பிதம் அடைந்தது.

ஏற்கனவே குமுதினிப்படகு சேதமடைந்துள்ளதால் கடல் போக்கு வரத்து ஸ்தம்பித்துள்ளது. இந்நிலையில் பஸ் சேவையும் ஸ்தம்பிதமடைந்துள்ளதால் நெடுந்தீவு மக்களின் உள்ளூர் போக்கு வரத்துக்கள் மிகவும் மோசமாககப் பாதிக்கப் பட்டுள்ளது.

தற்சமயம் பெய்து வரும் பலத்த மழை காரணமாக மழையில் நனைந்தபடி கடற்பயணத்தை மேற்கொள்ளும் நெடுந் தீவு மக்கள் துறைமுகத்தில் இருந்து தமது இருப்பிடங்களுக்கு செல்வதிலும் பஸ் சேவையின்மையால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

வேறு போக்குவரத்து வசதிகள் உள்ளூருக்குள் இன்மையால் தூர இடங்களுக்குச் செல்லும் மக்களும் மழையில் நனைந்தபடியே செல்லவேண்டியுள்ளது. கடந்த ஒரு வாரத்துக்கு மேலாகப் பழுதடைந்துள்ள குமுதினிப்படகு திருத்த வேலைகள் இன்னமும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (202-111)

## யாழ்.வலய அதிபர்களுக்கு முழுநாள் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான முழுநாள் செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

2007 ஆம் ஆண்டுக்[illegible] தர உள்ளீடு தொடர்பான கணக்க[illegible] 2008 ஆம் ஆண்டு முன்னெடு[illegible]யர்மட்டக் கல்விச் செயற்பா[illegible] அறிக்கை ஆகியவற்றை எடு[illegible] வலயக் கல்விப்பணிப்பாளர் [illegible] வதநாயகம் கேட்டுள்ளார். (1)

## பொருள் [illegible]; கலந்து[illegible]

யா[illegible]ர்ச் 24

பொருள் விநியே[illegible]ர்பான கல்ந்துரையாடல் இன்[illegible]கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கே.கணேஸ் கேட்டுள்ளார். (202)

## பாடசாலைகளில் சமையல்கூடம் அமைப்பதற்கு உதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் உணவு தயாரிப்பதற்கு வசதியாக சமையல் கூடம் அமைப்பதற்கு உதவி செய்யப்படவுள்ளது.

குடா நாட்டில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு கடந்த ஆண்டுமுதல் மதிய உணவு வழங்கப்படுகின்றது. இந்த உணவைச் சமைப்பதற்கு பல பாடசாலை களில் சமையல் கூடம் இல்லாது பெரும் சிரமப்படுகின்றன. (202)

## மரண அறிவித்தல்கள்

### அருட்திரு.டானியல் இராஜரட்ணம் அம்பலவாணர்

(REV. D.R. அம்பலவாணர்)

தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனத்தின் இளைப்பாறிய குருவான அருட்திரு.டானியல் இராஜரட்ணம் அம்பலவாணர் நேற்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை மறுமைக்குள் பிரவேசித்து விட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான அருட் திரு J.P.அம்பலவாணர்-அன்னம்மா அம்பலவாணர் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற ஈவ்லின் இராசமலரின் அன்புக் கணவரும் இராஜமோகன் (இந்தியா), இராஜநிமலன் (புங்குடுதீவு திருச்சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பேரருள் கலாநிதி D.J. அம்பலவாணர் (பேராயர், யாழ்.ஆதீனம்), அருட்திரு D.S.அம்பலவாணர் (விசுவமடு திருச்சபை), J.Pஅம்பலவாணர் (சிட்னி, ஆஸ்ரேலியா), திருமதி அதிசயம் முத்தையா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தேவகரனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

*கிறீன்விலா,*
*மானிப்பாய்.*

*தகவல்:*
இராஜநிமலன் (மகன்)
Dr.(திருமதி) சந்திரா அம்பலவாணர் (மைத்துனி).
(72288)

### திருமதி வேலுப்பிள்ளை தெய்வானை(சவுந்தரம்)

காரைநகர், பலகாட்டை பிறப்பிடமாகவும் இல. 503, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை தெய்வானை நேற்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் அமரர்களான ஆறுமுகம்-பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் பாராசக்தி(சக்தி), கனகேஸ்வரி(பேபி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குகதாசனின் அன்பு மாமியாரும் பவானி, கஸ்தூரி, உமாகயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அமரர் மாணிக்கம், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2008) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 503, மானிப்பாய்*
*வீதி, யாழ்ப்பாணம்*

தகவல்:
க.குகதாசன் (மருமகன்)
(72289)

### திருமதி புவனேஸ்வரி கதிரவேற்பிள்ளை (வைரவநாதன்)



வேலணை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கதிரவேற்பிள்ளை 22.03.2008 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கதிரவேற்பிள்ளையின் (வைரவநாதன்)அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்துரை-ஞானகுணபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், கலையரசி, கலைவண்ணன், வைதேகி, காலஞ்சென்ற ஜெயகாந்தன் மற்றும் உமாமகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலகிருஸ்ணன், அனுஜா, ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற போமலர் மற்றும் கந்தசாமி, மகாலட்சுமி, மகேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகாதேவன், மதிவதனி, இராசநாதன், அமிர்தலிங்கம், சோமசுந்தரம், காலஞ்சென்றவர்களான பொன்னையா, பராசக்தி, அருளானந்தம், சிவக்கொழுந்து, இராமலிங்கம், பாலசுப்பிரமணியம் மற்றும் இராமலிங்கம், சதாசிவம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியை நேற்று (23.03.2008) ஞாயிற்றுக் கிழமை இல. 15, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் நடைபெற்று கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 15, செட்டித்தெரு ஒழுங்கை,*
*நல்லூர், யாழ்ப்பாணம்*

தகவல்:
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### சிவகுரு சீவரத்தினம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும், கிழக்கு வளவு, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சீவரத்தினம் நேற்று (23.02.2008) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், புத்தூரைச் சேர்ந்த சிவகுரு-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், மல்லாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம்-பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற நாகம்மா, நடராசா (கனடா), சின்னம்மா, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குணராஜசிங்கம் (பெரியண்ணை), குமரசிங்கம் (நடுவில் அண்ணை) மற்றும் சுந்தரலிங்கம் (லிங்கண்ணை), காலஞ்சென்ற கந்தசாமி, வவுஸ்திராதேவி, காலஞ்சென்ற காசிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் மங்களேஸ்வரி (டென்மார்க்), தேவகுமார் (கனடா), இராசகுமார் (சுவிஸ்), சதரூபி ஆகியோரின் தகப்பனாரும், பத்மநாதன், சுகிர்தா, ராணி, ஜீவபூரணி, பேரானந்தமூர்த்தி (மதுர் டீசல் எஞ்சினியர்ஸ், சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும், அபிரா, ஜெனிசா, மதுஸ், நிகேதன், மதுரிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிழக்குவளவு,*
*மல்லாகம்.*

தகவல்:
பேரானந்தமூர்த்தி
(மருமகன், மதுர் டீசல் எஞ்சினியர்ஸ்)

# கடற்பரப்பில் கண்ணிவெடிகள் அதிகரிக்குமானால் 4ஆவது ஈழப்போரில் புதிய பரிமாணம் தோன்றும்

## ஆயுதத் தளபாடங்களை எடுத்துச் செல்வதில் பாதிப்புகள் ஏற்படும் சாத்தியம்



இக்பால் அத்தாஸின் கள நிலை ஆய்விலிருந்து

கடும் மழை காரணமாக வன்னி கள நிலையில் அமைதி தென்பட்டபோதிலும் சண்டை பெருங்கடல் பகுதிக்கு நகர்ந்திருப்பதாக உணரமுடிகிறது.

நேற்றுமுன்தினம்(சனிக்கிழமை) விடியற்காலையில் கடற்படையின் ஆறு டோறா அதிவேக தாக்குதல் படகுகள் வட கிழக்கு கடற்பகுதியில் காவல் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்துள்ளன. இரண்டிரண்டாக அணிவகுத்துச் சென்றுகொண்டிருந்த இந்தப் படகுகளில் இரண்டு முல்லைத்தீவின் புலிகளின் பகுதிக்கு அருகாமையில் உள்ள நாயாறு கடற்பகுதிக்குள் சென்றிருந்தன. இவைகளில் ஒன்று உள்ளூர் தயாரிப்பான டோறா(437) வெடித்துச் சிதறி மூழ்கியது. இந்தப் படகிலிருந்து ஆறு கடற்கடையினரையும் அதன் பொறுப்பதிகாரியையும் சேர்ந்து பின்னால் வந்துகொண்டிருந்த படகு காப்பாற்றியது. சிதறடிக்கப்பட்ட படகிலிருந்த மேலும் 10 பேரின் கதி என்னவென்று தெரியவரவில்லை.

கடல் கண்ணியில் சிக்கிவெடித்தது

இந்தப் படகு கடல் கண்ணிவெடியொன்றில் சிக்கி வெடித்திருக்கலாம் என்று கடற்படையினர் கருதுகின்றார்கள். அல்லது மனித நீர்மூழ்கி வெடிகுண்டினாலும் இது நடந்திருக்கலாம் என்பது அவர்களின் கணிப்பு. ஆனால் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை.

மனித நீர்மூழ்கி (டோர்பிடோ) வெடிகுண்டு இரண்டுவிதமாக இருக்கமுடியும்.

**கடற்படைக் கலங்களின் நடமாட்டமும் பின்னடையும்**

ஒன்று ஒரு படகைத் தகர்ப்பதற்கு உடலில் வெடிபொருள்களுடன் தற்கொலையாளி ஒருவர் வந்து அதனுடன் மோதுவது, மற்றது வெடிபொருள்களுடன் கூடிய ஒரு மிதக்கும் சாதனத்தை அல்லது நீர்மூழ்கி சாதனத்தை ஒருவர் செலுத்தி வந்து மோதுவது.

இந்த வெடிப்புக்கான சரியான காரணத்தை இன்னமும் கடற்படையினரால் உறுதியாகச் சொல்லமுடியாமலிருக்கின்றது. இரண்டாவது படகில் வந்தவர்களாலோ காப்பாற்றப்பட்டவர்களாலோ சரியான காரணத்தை சொல்லமுடியாமல் இருக்கின்றது. இரு தரப்பு தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை. இலத்திரனியல் ஆதாரங்கள் ஏதுவும் கூட எம்மிடம் இல்லை என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

அப்பிரதேசத்தில் நடத்தப்பட்ட தேடுதலின்போது ஒரு கண்ணாடி இழைநார் ஷெல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. சிறு சிறு பிளாஸ்டிக் துண்டுகள், எரிந்துபோன பொலித்தீன்களும் காணப்பட்டுள்ளன. கண்ணாடி இழைநார் ஷெல்லில் பெருமளவு வெடிபொருள்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்திருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. 'டோறா 437' மூழ்கடிக்கப்பட்டதற்கான சரியான காரணத்தைக் கண்டுபிடிக்க இப்பொருள்கள் உதவலாம் என்று கடற்படையினர் நம்புகின்றனர்.

கரும்புலிகள் நடத்திய தாக்குதல்

இதேவேளை 'தமிழ்நெற்' இணையத்தளம் வெளியிட்ட அறிக்கையில் கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் டோறாப் படகு அழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படை அணியொன்றுடன் கரும்புலிகள் அணியொன்று மோதலில் ஈடுபட்டது. விரைந்து தாக்கும் கடற்படை டோறாப் படகொன்றை கரும்புலிகள் தாக்கி மூழ்கடித்துள்ளனர். சனிக்கிழமை அதிகாலை 2.10 மணியளவில் முல்லைத்தீவுக்கும் நாயாற்றுக்கும் இடையில் இச்சம்பவம் இடம்பெற்றது. குறைந்தது 14 இலங்கைக் கடற்படையினர் கொல்லப்பட்டிருப்பதாகவும் மூன்று கரும்புலிகள் தமது தரப்பில் பலியாகியுள்ளதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர் என்று தமிழ்நெற் அறிவித்தது.

இதேவேளை, 10 கடற்படையினர் காணாமற்போயிருப்பதாக மூழ்கடிக்கப்பட்ட படகில் 16 கடற்படையினர் இருந்துள்ளனர் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

மோதலின்போது லெப்டினன்ட் கேணல் அன்புமாறன், மேஜர் நிரஞ்சனி மற்றும் மேஜர் கனிநிலா ஆகியவர்கள் மரணமடைந்திருப்பதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகு கடற்கண்ணிவெடியொன்றுடன் மோதுண்டு வெடித்துச் சிதறியுள்ளது என்று கடற்படையினர் அறிவித்துள்ளதுடன் இருதரப்பு மோதல் எதுவும் இடம் பெறவில்லை என்றும் அறிவித்துள்ளனர்.

புதிய பரிமாணம்

டோறாப் படகு அழிக்கப்பட்டதற்கும் அதன் 10 சிப்பந்திகள் காணாமல்போனமைக்கும் கடற்கண்ணிவெடிகள்தான் காரணம் என்றால் 4அவது ஈழப்போர் புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது என்றே கொள்ள வேண்டும். கடற்கண்ணிவெடிகள் பெருமளவில் பயன்படுத்தப்படுமானால் கடற்பரப்பில் கடற்படைக் கலங்களின் நடமாட்டத்தை அது பெரிதும் பாதிப்பதாய் இருக்கும். கடற் கண்காணிப்பை மட்டுமல்ல, யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள 40ஆயிரம் படையினர், பொலிஸாரின் ராணுவப் பொருள் மற்றும் உணவு விநியோகத்துக்கும் பெரும் பாதுகாப்பு அரணும் தகர்க்கப்படுவதாய் அமைந்துவிடும். பொருள்களும் இராணுவம் மற்றும் பொலிஸாரும் திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் பயணம் செய்வதற்கு கடற்படைக் கலங்களே பாதுகாப்பு வழங்கிவருகின்றன. என்றாலும் சமீப காலத்தில் ஏனைய பகுதிகளில் அவ்வாறான சம்பவம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

முல்லைத்தீவுக் கடற்கரை நிலைகள் தாக்குதலுக்குள்ளாவதைத் நிறுத்துவதற்கும் கடற்கரைப் பகுதிகளில் படையினர் வந்து இறங்குவதைத் தடுப்பதற்கும் புலிகள் இவ்வாறு கடற்கண்ணிகளை விதைக்கக்கூடும் என்று கடற்படை மேலதிகாரிகள் கருதுகின்றனர். இப்பகுதியே புலிகளின் அதிகாரக் கோட்டையாக விளங்கும் இப்பகுதிகளாலேயே கடற் புலிகளின் இறங்குதுறைகளும் அமைந்துள்ளன. வன்னியில் இலங்கை இராணுவத்தின் முன்னேற்றத்தைக் கடும் மழை பெரிதும் தடை செய்துள்ளது.

இராணுவத்துக்கு மழையினால் ஏற்படும் பின்னடைவு


கடந்த வெள்ளியன்று மன்னார் பகுதியில் நடந்த கிளைமோர் தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப்பட்டனர். மன்னாரில் ராணுவத் தலைமைப் பகுதியைச் சேர்ந்த படையினரின் சவுத்பார் பகுதிலுள்ள பௌத்தகோயிலில் இருந்து ஒரு சமய சடங்கிற்காகப் பௌத்த பிக்கு சிலரைக் கொண்டுவருவதற்காக மூன்று பஸ்களை ஏற்பாடு செய்திருந்தனர். கிளைமோர் முதல் பஸ்ஸைத் தப்பவிட்டுவிட்டது. இரண்டாவது பஸ் சிக்குண்டது. ஒரு கப்டனும் சிப்பாயும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர் வேறும் ஆறு சிப்பாய்கள் காயமுற்றனர். இவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடம் என்று கூறப்பட்டது.

வெலிஓயா பிரிவில் எவருக்கும் சொந்த மற்ற பிரதேசத்தையும் பெருவாரியாகக் கைப்பற்றியுள்ள இராணுவத்தினர் அப்பகுதியில் மழை மற்றும் சேற்றுநிலம் காரணமாக முன்னேற முடியாமல் இருக்கின்றனர். ஆனால் ஆட்லறி மற்றும் மோட்டார் மோதல்கள் தொடர்ந்தபடி இருந்தன.

இப்பகுதியில் வெள்ளநீர் முழங்கால் அளவுக்கு இருப்பதாக பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். இன்னும் இங்கு எதிர்பாராத சம்பவமாக கணிசமான எண்ணிக்கையில் சிப்பாய்கள் டெங்கு அல்லது சிக்குன்குனியா காய்ச்சலுக்குள்ளாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது. அவர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் படையினரை இடம் மாற்றிச் சீரமைக்கும் நடைமுறை மேற்கொள்ளப்படும் நிலையில் இந்த நிலைமை தோன்றியிருக்கின்றது.

இதேவேளை ஏற்கனவே இராணுசேவையிலிருந்து ஓய்வுபெற்ற பல இராணுவ கடற்படை மற்றும் விமானப் ப... உயர் அதிகாரிகள் சிலர் கொழும்பில் நடந்த மாநாட்டில் உயர்நிலை இராணுவ அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்குவதில் ஈடுபட்டிருந்தார்கள். (ப)



# அறிக்கைகள், கண்டனங்கள் மூலம் மனித உரிமை மீறல் குற்றங்களை மூடிமறைத்துவிட முடியுமா என்ன?

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவது தொடர்பாக வெளிநாட்டு நிறுவனங்களும் அனைத்துலக அமைப்புகளும் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களை மறுதலித்துச் சமாளிப்பதற்கு பெரும் எடுப்பில் பிரகடனங்களை ஊடக அறிக்கைகளை மற்றும் பிரசாரங்களை அரசு முன்னெடுத்து வந்தபோதிலும் அவை எவையாலும் மேலோங்கிவரும் அக்குற்றச்சாட்டுக்களை தடுத்து நிறுத்த முடியாமல் இருக்கின்றது.

அவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்வர்கள் மீது தனிப்பட்ட முறையில் அவதூறுகளையும், கடும் சொற்களையும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பொழிந்து தள்ளினார்கள். ஆனால் அரசின் தோற்றத்தின் மீது ஏற்பட்டுவிட்ட களங்கத்தை குறைப்பதற்கு அவர்களால் முடியவில்லை.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தனது நிலையை தற்காத்துக் கொள்வதற்காக அரசாங்கத் தரப்பில் முன்வைக்கப்பட்ட சில தரவுகளும் வாதங்களும் தவறானவையாக காணப்பட்டுள்ளன. இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்கா விடுத்த தனது வருடாந்த அறிக்கையை அடுத்து சங்கடமான நிலைமை ஒன்று வெளிப்பட்டது.

அமெரிக்கத் தூதர் அழைக்கப்பட்டார்

இந்த நிலைமையில் பெரிதும் சங்கடத்துக்குள்ளான வெளிநாட்டமைச்சர் றோகித போகொல்லாகம அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கை அழைத்து அரசாங்கத்தின் மகிழ்ச்சியின்மையை தெரிவித்துக் கொண்டார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே அவ்வாறு செய்துகொண்டதாகத் தெரியவந்தது.

இலங்கையின் உண்மை நிலையை அந்த அறிக்கை முழுமையாக திரித்துக் கூறுகின்றது. மிகைப்படுத்தப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் திருப்பத்திருப்ப சொல்லப்படுவது துரதிஷ்டமாகும் என்று அமெரிக்கத் தூதரிடம் போகொல்லாகம தெரிவித்திருந்ததாக ஓர் அறிக்கை கூறியது.

**'சண்டேரைம்ஸ்' அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது**

இருந்தபோதிலும் சில மணித்தியாலங்களில் அமெரிக்கத் தூதுவர் பிளேக் வெளிநாட்டமைச்சுக்கு திருப்பிக் கொடுத்தார்.

''அமெரிக்கா அரசு விடுத்த அறிக்கை சரியானதென்ற நிலைப்பாட்டை அது எடுத்துள்ளது'' என்று பிளேக் அறிவித்தார். அதுடன் அந்த விடயம் முடிவுற்றதாக கருதப்பட்ட நிலையில், மஹிந்த அரசு வெளிநாட்டுக் கொள்கை விடயத்தில் பாரிய தவறுகளை விடுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

முற்காலத்தில் வெளிநாட்டு அமைச்சர்கள் ஒரு கொள்கை தொடர்பாக ஒரே கொள்கையை ஒரே கருத்தில் வெளியிட்டிருந்த நிலை மாறி இன்று ஒரே விடயம் தொடர்பாக பலரும் பலவித கருத்துக்களை வெளியிடும் நிலை ஏற்பட்டுள்ளது. பின்னர் மற்றவர்கள் இதைக் குறித்து சிரித்துக் கிண்டல்செய்யும் வேளையில் இவர்கள் ஒருவரையொருவர் முதுகில் தட்டிப் பாராட்டிக் கொள்கிறார்கள்.

ஜெனிவாவில் சந்தித்தமை பற்றி

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டிற்கு சென்ற குழுவுக்குத் தலைமை வகித்து சென்றவரான அனர்த்த பராமரிப்பு மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் ஒரு தனிப்பட்ட அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

இலங்கை விமர்சனங்களை எதிர்க்கவில்லை. ஆனால் அப்படியான விமர்சனம் நியாயமானதாக, காத்திரமானதாக எல்லாவற்றிற்கும் மேலாக சரியானதாக இருக்க வேண்டும் என்று அந்த அறிக்கை கூறியது.

முன்னதாக அவர் ஜெனிவாவிலிருந்து இலங்கை திரும்பியவுடன் ஜெனிவாவில் தாமும் தமது குழுவும் மேற்கொண்ட சாதனைகள் பற்றி வெகுவாகப் புளுகிக் கொண்டார் பல நாடுகளின் ஆதரவை சம்பாதித்து விட்டதாக தெரிவித்திருந்தார்.

வேறு எந்நாடுகளிலும் போலவே வெளிநாட்டுக் கொள்கை என்பது வெளிவிவகார அமைச்சுக்கென்றே ஒதுக்கப்பட்ட விடயம். ஏனைய அமைச்சருக்கும் தமது கொள்கைகளை அந்த அமைச்சின் மூலம்

(04ஆம் பக்கம் பார்க்க)

# மணி விழா வாழ்த்துகள்



எமது கல்வியியல் பேராசான்

**மா.சின்னத்தம்பி அவர்கள்**

சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் எம் மண்ணிற்கும், எம் கல்விக்கும், எம் சமூகத்திற்கும் சேவையாற்ற அவரது இம்மணி விழாக் காலத்தில் எமது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

பொது நிர்வாகத்தில் முதுமாணி
**முதலாம் அணி மாணவர்கள்**
உயர் பட்டப் படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(72273)


# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை செல்வராஜா(றோக்கையா)

(ஓய்வுபெற்ற முகாமையாளர், பனை, தென்னை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், 7/2, மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் 15A, ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை செல்வராஜா நேற்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை- பூரணம் தம்பதியரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்ற கபிரியேல் மாட்டீன்- திரேசம்மா தம்பதியரின் பாசமிகு மூத்த மருமகனும் யசிந்தாவின் அன்புக் கணவரும் டெனி யசோதரன் (மக்கள் தொடர்பு உத்தியோகத்தர், கொழும்பு வடக்கு, போதனா வைத்தியசாலை, றாகம), பெனி சுபோதரன் (கொழும்பு), ஜீன் ஷர்மிலி (3ஆம் வருட மாணவி, நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவராசா (கட்டட ஒப்பந்தக்காரர்), சறோ, சந்திரா, ஆனந்தன் (கனடா), தனசோதி (ஆசிரியர், யாழ். பாஷையூர், சென்.அன்ரனிஸ் றோ.க.வித்தியாலயம்), றெஜி (கனடா), விஜி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரியநாயகம், செல்வநாயகம் (மட்டக்களப்பு), மேரி மெற்றில்டா, பிரான்சிஸ்கா (டென்மார்க்), கொண்சி (டென்மார்க்), ராசநாயகம் (இத்தாலி), விக்ரர் (லண்டன்), காலஞ் சென்ற மேரி ஸ்ரெலா மற்றும் சவுந்தரநாயகம் (டென்மார்க்), பத்மா, தம்பிராசா, பசில், விக்ரோ (கனடா), பாலசுப்பிரமணியம் (இலங்கை மின்சார சபை), றெஜினோல்ட் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15A, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (72287)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சிவலிங்கம் மனோரஞ்சினி

(Assistant Manger, Kreston MNS & Co., Hatton)



யாழ்ப்பாணம், இளவாலையைப் பிறப்பிடமாகவும் ஹற்றனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் மனோரஞ்சினி (21.03.2008) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மகளும், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சதாசிவம் - பூபதி தம்பதியரின் மருமகளும், எஸ். சிவலிங்கத்தின் (Branch Manger Kreston MNS & Co. Hatton) அன்பு மனைவியும், பிரணவன், பிரசாத் ஆகியோரின் அன்புத் தாயாரும், சியாமளா, சங்கீதா ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.க. இராமசந்திரன், Dr.இலட்சுமணன், சறோஜினி, கோபாலசிங்கம், ஜெயபாலசிங்கம், குணபாலசிங்கம், பத்மினி ஆகியோரின் சகோதரியும், சந்திரவதனா, தயாளமலர், சுந்தரலிங்கம், தயாநிதி, கொஞ்சலாதேவி, ஜெகதீஸ்வரி, சிவனேஸ்வரலிங்கம், தேவரஞ்ஜினி, சற்குணலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2008) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டகலை கொமர்ஷல் மின் மயானத்தில் பிற்பகல் 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Arcon House,
Brown Site,
Fruithill, Hatton.
051 4920824 (சி/551951)

தகவல்:
குடும்பத்தினர்.

# காசநோய் தடுப்புத்தினம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

சர்வதேச காசநோய் தடுப்புத்தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் நடை பெறவுள்ளது.

வடஇலங்கை காசநோய் தடுப்புச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ உட்பட யாழ். வர்த்தகர் சங்கத் தின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர். (202-111)

# அறிக்கைகள்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்துவதே வழக்கம். ஆனால் பல்வேறு அமைச்சுக்களாலும் பல ஆள்களும் இந்த வேலையை இப்போது செய்கிறார்கள்.

போகொல்லாகம அமெரிக்க தூதருடன் நடத்திய சந்திப்பின் பின்னர் வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததாய் அமைந்தது. 14 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில் -

மதிப்பு வாய்ந்த மனித உரிமை ஸ்தாபனமான ஐ.சி.ஆர்.சி( செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு) இலங்கையில் எப்பாகத்துக்கும் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தவிர போய் வரக்கூடிய வசதி கொண்ட ஸ்தாபனம் உறுதிபடக் கூறியிருக்கிறது. அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் காணாமல்போதல், எதிர்பாராத கொலைகள் போன்றவை 2007 ஆம் ஆண்டின் இரண்டாம் மூன்றாம் காலாண்டுகளில் வெகுவாக குறையும் போக்கைக் காட்டுகின்றன என்று ஐ.சி.ஆர்.சி. இலக்கங்களின் படி அமெரிக்க ராஜாங்க அமைச்சின் கணிப்புக்குமாறாக யாழ்ப்பாண மாவட்டத்திலும் இந்தக் குறைவு போக்கு தெளிவாகத் தெரிகின்றது. ஐ.சிஆர்.சியின் இந்த இரகசிய அறிக்கையைப் பார்க்கும் வசதியிருந்தும் ராஜாங்க அமைச்சு களநிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றுக்களை அலட்சியப்படுத்திவிட்டு பிரசார இயந்திரத்துக்கு தீனிபோடும் வட்டாரங்களின் தகவல்களை நம்பிக்கொண்டிருப்பது ஆழ்ந்த கவலைக்குரியது என்று தெரிவித்துள்ளது.

கொலைகளும் காணாமல் போதலும் வெகுவாகக் குறைந்து கொண்டுவருவதாக ஐ.சி.ஆர்.சி. கூறியது என்ற விடயத்தில் வெளிநாட்டமைச்சு உண்மையைக் கூறியதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆச்சரியம் என்னவென்றால் இப்படி எதையுமே தாங்கள் கூறவில்லையென்று ஐ.சி.ஆர்.சி. இப்போது ஆணித்தரமாக மறுத்துள்ளது.

இலங்கையிலும் ஜெனிவாவிலும் ஐ.சி. ஆர்.சி. விடுத்துள்ள அறிக்கையொன்றில், காணாமல் போகிறவர்கள் தொடர்பாக ஐ.சி.ஆர்.சி. கண்டுபிடித்த விடயங்கள் உட்பட இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்து கொண்ட இரகசிய அறிக்கையை இலங்கை அரசு தனது அறிக்கையொன்றில் வெளிப்படுத்தியிருப்பதைக் கண்டித்திருப்பதுடன் ஆட்சேபனையும் தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்களை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதைக் காட்டுவதற்கு இதுபோதுமானது. ஆனால் தென் ஆசியாவுக்கான பணிநிலை தலை வர் ஜெக்ஸ் டிமாயியோ இதுபற்றி வெளி யிட்டுள்ள கருத்து என்னவென்றால் -

இலங்கையில் மிகமோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதை அங்கு இடம்பெறும் சட்டத்துக்கு மாறானகொலைகளும் காணாமல்போதலும் எடுத்துக்காட்டுகின்றன. இவை நிறுத்தப்படவேண்டும். அதிகாரிகளோடு நேரடியாகவும் இரகசிய அறிக்கைகள் மூலமும் தொடர்பு கொண்டு இவ்விடயத்துக்கு முடிவுகளை விரும்புகின்றோம். இதனால் இலங்கையில் இடம்பெறும் ஏராளமான காணாமல் போகும் விடயங்கள் தொடர்பாக பகிரங்கமாக பேசவும் விரும்பவில்லை - என்றார்.

(ப)


## தவறிவிட்டது

419, கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கல்லூரி வீதி, இளவாலையை நிரந்தர முகவரியாகவும் கொண்ட புவனேஸ்வரி தர்மரட்ணம் (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை) ஆகிய நான் (20.03.2008) அன்று நல்லூரில் இருந்து ஆடியபாதம் வீதி, கொக்குவில், காங்கேசன்துறை வீதியூடாக கடமைக்கு செல்கையில் அடையாள அட்டை கள் (556011680×), திறப்புக்கோர்வை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை வழியில் தவறவிட்டுவிட்டேன். கண்டெடுத்தவர்கள் ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை அல்லது 021 222 9382 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(72281)

புவனேஸ்வரி தர்மரட்ணம்.


# மழையால் பாதிப்புற்ற வலி. தென்மேற்கு விவசாயிகளுக்கு நஷ்டஈடு தரக் கோரிக்கை

வலி.தென்மேற்கு, மார்ச்24

அண்மை நாள்களாகப் பொய்துவரும் பெரும் மழையால் பாதிப்படைந்த வலி.தென்மேற்கு பிரதேச விவசாயிகளுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவைப் பெற்றுத் தருமாறு பண்டத்தரிப்பு அனர்த்த முகாமைத்துவக் குழு வலி.தென்மேற்குப் பிரதேச செயலரைக் கடிதம் மூலம் கோரி யுள்ளது.

பிரதேச விவசாயிகளுக்கு ஏற்பட்ட அழிவுகள் குறித்தும் அக் கடிதத்தில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனம், பிரான்பற்று விவசாயிகள் சம்மேளனம் ஆகியன தத்தமது பகுதிகளில் விவசாயிகளுக்கு மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட பயிரழிவுக்கு நிவாரணம் பெற்று தருமாறு வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலரையும் கடிதங்கள் மூலம் கோரியுள்ளன.

தமது பகுதிகளில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்களும் , வெங்காயம், மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்களும் பலத்த பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக இக்கடிதங்களில் குறிப்பிட்டுள்ளது. (202-135)


## ST. PATRICK'S COLLEGE OLD BOYS' ASSOCIATION JAFFNA PATRICK'S DAY O.B.A. TEA

The above function scheduled to be held at 4.30 p.m. on 24th. March 2008, has been shifted to the 29th. March **Saturday**. The Members of the O.B.A. are invited to participate at the above function at 4.30 pm. on Saturday 29.03.2008, at the Mathuram Square premises

*59, St. Partrick's Rd.,*
*Jaffna.* (சி/551953)

S.Mariathas,
Gen.Secretarty.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க

**மாபெரும் மலிவு விற்பனை**

25.03.2008 முதல்-14.04.2008 வரை சகல புடைவைகளுக்கும் கழிவு வழங்கப்படும். றெடிமேட் ஆடைளுக்கு அதிகூடிய விலைக்கழிவு வழங்கப்படும்.

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம். (சி/551935)

**BEST COMPUTERS IN RESONABLE & FAIR PRICES**




Intel 1.8 GHz Dual Core Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
1 GB DDR II Kingston RAM
160 GB Sata Hard Disk
DVD Writer
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS
2.1 Woofer




Intel 1.8 GHz DualCore Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
512 MB DDR II Kingston RAM
80 GB Sata Hard Disk
Combo Drive
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS

Celeron 1.6 GHz Dual Core Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
512MB DDR II Kingston RAM
80 GB Sata Hard Disk
Combo Drive
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
2.1 Woofer




Intel 2.2 GHz Core 2 Duo Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
1 GB DDR II Kingston RAM
160 GB Sata Hard Disk
DVD Writer
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS




**PC SOLUTIONS**

527/1, Navalar Road, Jaffna.
(TCT Super Market - Upstair)


## இவரைக் காணவில்லை



கூழாவடி கிழக்கு,
ஆனைக்கோட்டையைச் சேர்ந்த
**வைத்திலிங்கம் கைலாயநாதன்**
என்பவர் 22.03.2008 சனிக்கிழமை காலை 9 மணிக்கு வெளியில் சென்றவர் வீடு திரும்பவில்லை. 51 வயதுடைய மனநோயாளியான இவர் நீல நிறச்சாரமும் நீல நிற அரைக்கைச் சேர்ட்டும் அணிந்திருந்தார்.

இவரைக் காணாமல் இரு சகோதரிகளும் தேடுகின்றனர். இவரை அடையாளம் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

கூழாவடிகிழக்கு,
ஆனைக்கோட்டை.

வைத்திலிங்கம் வீரலட்சுமி,
வைத்திலிங்கம் கமலா.
T.P.:222 6764, 222 6022.

(72284)

## கண்ணீர் அஞ்சலி





கழக மூத்த உறுப்பினர் லயன்
**பொன்னையா தியாகராசா**
(இன்சூரன்ஸ் உஷா, தியாகு என அழைக்கப்படுபவர்)

அவர்கள் கனடாவில் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"பயன் துக்கார் செய்த உதவி
நயன் தூர்க்கின் நன்மை கடலிற் பெரிது"*

கழக அங்கத்தவர்கள்,
லயன்ஸ் கழகம், சாவகச்சேரி.

(சி/55159)


உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மோதிக் கொண்ட உடுவில் மத்திய விளையாட்டுக்கழகம், சுன்னாகம் றோயல் விளையாட்டுக் கழகத்தினதும் ஆட்டத்தின் விறுவிறுப்பான கட்டங்களை முதலிரு படங்களிலும் காணலாம்.

இரு அணிகளின் வீரர்களும் மத்தியஸ்தர்கள், பதில் மாவட்ட விளையாட்டு அலுவலர் துரைசிங்கம், உடுவில் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் செல்வி பி.மனோன்மணியுடன் சேர்ந்து நிற்பதை கடைசிப் படங்களில் காணலாம்.

படங்கள்: நேசன்

# சென்றல் எட்டு விக்கெட்டுக்களால் கொக்குவில் இந்துவை வென்றது

## செல்ரன் 55 ஓட்டங்களை விளாசினார்

யாழ்ப்பாணம், மார்ச் 24

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் சென்றல் எட்டு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 61ஆவது ஓவரில் சலக விக்கெட்டுகளையும் இழந்து 224 ஓட்டங்களைக் குவித்தது.

செல்ரன் 55 ஓட்டங்களையும் ஸ்ரீபன் ராஜ் 42 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

வல்லவன் 16 ஓவர்கள் வீசி 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கே.நிறோஜன் 17 ஓவர்கள் வீசி 57 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளையும் எஸ்.நிறோஜன் 15 ஓவர்கள் வீசி 47 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து களம் இறங்கிய கொக்குவில் இந்து 37 ஆவது ஓவரில் 100 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

வல்லவன் 27 ஓட்டங்களையும் ஜெனார்த்தனன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

டயான் 10 ஓவர்கள் வீசி 26 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் கோபிகன் 11 ஓவர்கள் வீசி 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

தொடர்ந்து விளையாடுமாறு கொக்குவில் இந்துவை சென்றல் கேட்டுக் கொண்டது.

தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸில் ஆடிய கொக்குவில் இந்து 51 ஆவது ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 152 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

வல்லவன் 20, ஜனார்த்தன் 26, கோபிகன் 22 முறையே ஓட்டங்களைப் பெற்றனர்.

நவநீத் 13 ஓவர்கள் வீசி 50 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் சிவகரன் 5 ஓவர்கள் வீசி 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் செல்ரன் 5 ஓவர் கள் வீசி 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

26 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி எனக் களம் இறங்கிய சென்றல் 10.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 29 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பதிவு செய்தது. (1-86)



பன்னாலை சேர் கனகசபை வித்தியாலய மெய்வன்மைப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. வடக்கு பிரதேச செயலர் க.முரளிதரன் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட மாணவனுக்கு வழங்கிவைப்பதைப் படத்தில் காணலாம்.

# 'பொன் அணிகள்' மோதும் 50 ஓவர் ஆட்டம் இன்று

வலி.வடக்கு,மார்ச் 24

பொன் அணிகளின் கிரிக்கெட் போட்டியைத் தொடர்ந்து இடம்பெறும் மட்டுப்படுத்திய ஓவர்களுக்கான கிரிக்கெட் ஆட்டம் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய இராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்காக இந்த ஆட்டம் இடம்பெறுகின்றது.

இன்று காலை 9 மணிமுதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெறும்.

இம்முறை இடம்பெறும் போட்டி 20 ஆவது போட்டியாகும். ஏற்கனவே இடம் பெற்ற 19 போட்டிகளில் 5 போட்டிகளில் யாழ்ப்பாணக் கல்லூரியும் 14 தடவைகள் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. (1-86)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

# வடமராட்சியில் பற்மின்டன் ஆட்டம்; வதிரி பொமர்ஸ் பிரதேச சம்பியனானது

கரவெட்டி,மார்ச் 24

வடமராட்சியில் கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் முதன்முதலாக நடத்தப்பட்ட பற்மின்டன் சுற்றுப் போட்டியில் வதிரி பொமர்ஸ் அணி சம்பியனானது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடந்த இறுதியாட்டத்தில் வதிரி பொமர்ஸ் அணியும் வடமராட்சி மைக்கல் அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் பொமர்ஸ் வெற்றி பெற்று பிரதேச சம்பியனானது. (1-70)



கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான "பற்மின்டன்" 2008 இற்கான போட்டியில் வெற்றியீட்டிய "வதிரி பொமர்ஸ்" அணியினர்.

படம் : சுந்தா

# தீவக வலயத்தின் வலைப்பந்தாட்டப் போட்டி

வேலணை, மார்ச் 24

தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் வேலணை மத்திய கல்லூரியில் இடம்பெற்றன.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகள் வருமாறு:

★15 வயதின் கீழ்ப் பிரிவு - நயினாதீவு கணேசா வித்தி., யாழ்ரன் கல்லூரி, கரம்பன் சிறிய புஸ்பம் ம.ம.வித்தி.

★17 வயதின் கீழ்ப் பிரிவு - யாழ்ரன் கல்லூரி, யா/ புனித மரியாள் மகளிர் வித்தி., புங்குடுதீவு சுப்பிரமணியம் ம.வித்தி.

★19 வயதின் கீழ்ப் பிரிவு - யாழ்ரன் கல்லூரி, யா/ புனித மரியாள் ம.ம.வித்தி., யா/வேலணை மத்திய கல்லூரி.

(1-267)

# யாழ். இந்துவை இன்னிங்ஸால் வென்றது சென்.பற்றிக்ஸ்

## றொக்னோ, நிலோசன் அரைச்சதம் போட்டனர்

வலி.வடக்கு,மார்ச் 24

யாழ்ப்பாணம் பாடசாலைகளுக்கு 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியொன்றில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 4 ஓட்டங்களினாலும் ஓர் இன்னிங்சினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான போட்டி சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 45.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 94 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அஜித் 26, நிருகன் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

நிலோசன் இரண்டு ஓவர்கள் வீசி 02 விக்கெட்டுகளையும் மிலாண்டோ 09 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் சஜிந்திரன் 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 10 ஓவர்கள் வீசி 16 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் மற்றும் லவதீசன், குறக்னோ தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 69 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 214 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

றெக்னோ 65, நிலோசன் 54 ஓட்டங்களையும் பெற்றார்கள்

கௌசிகன், சங்கீதன் ஆகியோர் முறையே 44, 53 ஓட்டங்களுக்கு தலா 02 விக்கெட்டுகளையும் டிலான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி 45.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

பிரியதர்சன் 39, சுதா 24, அஜித் 18 ஓட்டங்களை பெற்றார்கள்.

மிலாண்டோ 12 ஓவர்கள் பந்துவீசி 06 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் லவதீசன் 10.3 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 31 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் சஜிந்திரன், மொறின் குமார் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இப்போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஓர் இனிங்சினாலும் 04 ஓட்டங்களினாலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை வென்றது. (1-86)

# தீவக வலயத்தின் உள்ளக போட்டிகள்

வேலணை, மார்ச் 24

தீவக வலயப் பாடசாலைகளுக் கிடையேயான உள்ளக விளையாட்டுக்களான பட்மின்ரன், செஸ் (சதுரங்கம்) ஆகிய போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டி நிகழ்வுகள் யாவும் காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளதால் பங்குபற்றும் பாடசாலை அணிகள் 15 நிமிடம் முன்னதாக சமுகமளிக்க வேண்டும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார். (1-267)

# உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## (வரைவுள்ளது)- உடுப்பிட்டி

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்தமானியில் வெளியிடப்படுவதுமான வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய யாழ்.மாவட்டக் கூட்டறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகி நான் 1997.02.17ஆம் திகதிய 963/1, இலக்கம் கொண்ட அதிவிசேட வர்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைக்களுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணைப்படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் கீழ் வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

* இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
* கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
* தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இதில் குறைந்தது இருவராவது (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது (09) பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
* இரண்டு வேட்பாளர்களுக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்குமிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
* தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
* தகுதியுள்ள கிளைப்பொதுச்சபை அங்கத்தவர்களுக்குக் கிளைக்குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனிதனியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வறித்தல்கள் கிடைக்கப் பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு இக்கிளைப் பொதுச்சபை நடைபெறும் திகதிகளில் தங்களுக்குரிய கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்துக் கிளைக் குழுவைத் தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்:

### கிளைப் பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும்
### 29.03.2008 சனிக்கிழமை மு.ப.9.30 மணி

| தொடர் இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் | கிளைப்பொதுச்சபைக் கூட்டத்தினை அழைக்கும் தவிசாயர் பெயர் |
|---|---|---|---|---|
| 01. | 01 | அந்தணத்திடல் | சுப்புறு ஏகாம்பரம் வித்தியாலயம் | பொ.மகேஸ்வரன் |
| 02. | 02 | இமையாணன் | கிளைக்கட்டிட முன்றல் | க.திசாகரன் |
| 03. | 03 | இமையாணன் கிழக்கு | இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | பா.கலைச்செல்வி |
| 04. | 04 | இமையாணன் வடமேற்கு | வீரசுத்தி விநாயகர் சனசமூக நிலையம் | எஸ்.சிறிதரன் |
| 05. | 05 | கலட்டி | கிளைக்கட்டட முன்றல் | ரி.என்.ராஜா |
| 06. | 06 | கம்பர்மலை | கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம் | வை.கைலைநாதன் |
| 06. | 06ஏ | கம்பர்மலை கிழக்கு | கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம் | அ.சராளன் |
| 08. | 07 | துதாவளை | கிளைக்கட்டட முன்றல் | க.நிமலன் |
| 09. | 08 | கப்புது | கப்புது ஏகாம்பரம் வித்தியாலயம் | அ.தயாளன் |
| 10. | 09 | கரணவாய் மத்தி | கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம் | எஸ்.சுகிந்திரன் |
| 11. | 10 | கொற்றையூர் | பொதுநோக்கு மண்டபம் கரணவாய் வடக்கு | எஸ்.சபேசன் |
| 12. | 11 | கரணவாய் தெற்கு | கரணவாய் மணியகாரன் தோட்டம் பாடசாலை | கே.கமலநாதன் |
| 13. | 12 | சமரபாகு | நியூட்டன் சனசமூக நிலையம் | க.கணேசு |
| 14. | 12ஏ | கொற்றாவத்தை | கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையம் | ஐ.நாகேஸ்வரன் |
| 15. | 13 | மண்டான் | கிளைக்கட்டடம் | ந.பத்மசோதி |
| 16. | 14 | முருகமூர்த்தி | முருகமூர்த்தி சனசமூகநிலையம் | ச.பாலகுமார் |
| 17. | 15 | நவிண்டில் | கிளைக்கட்டட முன்றல் | சி.சண்முகநாதன் |
| 18. | 16 | பழனிநிதி | கிளைக்கட்டட முன்றல் | நி.வித்தகலாநிதி |
| 19. | 17 | கரணவாய் வடக்கு | வளர்மதி சனசமூகநிலையம் | எஸ்.தாட்சாயனி |
| 20. | 18 | நாவலடி | நாவலர் சனசமூக நிலைய மாணவர்மன்றக் கட்டடம் | பொ.மோகன் |
| 21. | 19 | சோழங்கன் | கரணவாய் மகா வித்தியாலயம் | வி.ஜெயந்தன் |
| 22. | 19ஏ | விபுலானந்தர் மக்கள்கடை | விபுலானந்தர் சனசமூகநிலையம் | அ.விமல்ராஜ் |
| 23. | 20 | சிறீமுருகன் | சோழங்கன் சனசமூக நிலையம் | ச.சசிகரன் |
| 24. | 20ஏ | கல்லுவம் | கிளைக்கட்டட முன்றல் | ஏ.ஜேம்ஸ்மேசன் |
| 25. | 21 | கருணையம்பதி | கரணவாய் தாமோதர வித்தியாலயம் | சி.கணேசு |
| 26. | 22 | உருப்பிட்டி மத்தி | பொதுநோக்கு மண்டபம், உடுப்பிட்டி தெற்கு | சு.நல்லதம்பி |
| 27. | 23 | வல்வெட்டி | வல்வெட்டி விநாயகர் வித்தயாலயம் | வி.சிவகுமார் |
| 28. | 24 | வல்வெட்டி மேற்கு | கிளைக்கட்டட முன்றல் | வி.பிரதீஸ்குமார் |
| 29. | 33 | இமையாணன் வடக்கு | ஜோதி சனசமூக நிலையம் | பி.சிறிகுமார் |
| 30. | 34 | கரணவாய் வடமேற்கு | கலைமதி சனசமூக நிலையம் | ஆர்.விஜியமோகனராசா |

முக்கிய குறிப்பு: வாக்களிக்கத் தகுதியுள்ள சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்தல் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்கப்பெறாதவர்களும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.
22.03.2008

(சி/551940)

**பொ.சிவலிங்கம்,**
**கூ.அ.உ.ஆணையாளர்,**
**யாழ்.மாவட்டம்.**

## நெடுந்தீவு வைத்தியசாலைக்கு பற்சிகிச்சை நிபுணரை நியமிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்24

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு பற்சிகிச்சைக்கென பல் வைத்திய நிபுணர் ஒருவரை அனுப்பி உதவுமாறு நெடுந்தீவு வைத்திய அதிகாரி செல்வி தாமரைச்செல்வி பாலசிங்கம் யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

இங்குள்ள வைத்தியசாலையில் பல் சிகிச்சைக்கென உரிய வசதிகள் இருந்த போதும் பல்வைத்திய அதிகாரி ஒருவர் இன்மையால் நீண்ட காலமாக மேற்படி சிகிச்சை நிலையம் இயக்கமின்றி உள்ளது. இதனால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பல் சிகிச்சைக்காக மக்கள் யாழ்.போதனா வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-111)

## சட்டவிரோதமாக மணல் கடத்தியவருக்கு சிறைத் தண்டனையும் அபராதமும்

பருத்தித்துறை, மார்ச் 24

சட்டவிரோதமாகக் கடற்கரை மணல் கடத்திச் சென்ற ஹன்ரர் வாகனச் சாரதிக்குச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

புலோலியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் ஜெகதீசன் என்பவர் வல்லிபுரம் பிரதேசத்திலிருந்து சட்ட விரோமாக மணல் கடத் திச் சென்ற போது பொலீசாரிடம் சிக்கிக் கொண்டார். இவர் பருத்தித்துறை நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கறியலில் வைக்கப்பட்டிருந்தார்

இவர் மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது குற்றத்தை ஒப்புக் கொண்டார். நீதிபதி எதிரிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் 3 மாத சிறைதண்டணையும் விதித்தார். அபராதத்தைச் செலுத்தத் தவறின் மேலும் 3 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தர விட்டார். சட்டவிரோத மணல் பறிமுதல் செய்யப்பட்டது. (202-218)

## மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மழை பெய்த போது குடை பிடித்துக் கொண்டு மிதி வண்டியில் வந்தவரும் மோட்டார் சைக்கிளில் வந்தவரும் மோதுண்டதில் வயோதிபர் காயமடைந்தார்.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மட்டுவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த செல்லையா சிவராசா (வயது 60) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (202-207)

## விஞ்ஞான ஆய்வு கூட திறப்பு விழா இன்று

வலிதென்மேற்கு,மார்ச்24

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடத்தின் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன், தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாச நாதன் ஆகியோர் கலந்து கொள்வார். (202-135)

## மிதிவண்டியில் சென்ற மாணவன் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

மிதிவண்டி 'மட்காட்', சில்லுக்குள் புகுந்ததால் மாணவன் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். இச் சம்பவம் நேற்று முன்தினம் கச்சாயில் இடம்பெற்றது.

கெற்பேலியைச் சேர்ந்த வை.நவராசா (வயது 14) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (202-207)

## கைதடி விக்கினேஸ்வராவில் கலை அரங்கு திறப்பு

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் ஏழு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலை அரங்கினை அண்மையில் வித்தியாலய அதிபர் ச.ஞானலிங்கம் திறந்து வைத்தார்

வித்தியாலய பழைய மாணவன் ஆறுமுகம் பூபாலபிள்ளை என்பவர் தமது தந்தையின் ஞாபகார்த்தமாக இந்த அரங்கினை நிர்மாணிக்க நிதி உதவி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# ஆசிரியர்களின் நலன்களை நாடியதாக புதிய தேசிய இடமாற்றக் கொள்கை

கல்விச் சேவைகளை மிகவும் பயனுள்ளதாக மேற்கொள்ளக்கூடியவாறும், மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் உயர்வான நலன்புரிச் செயற்பாடுகளுக்கு பொருந்தக் கூடியவாறும் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமைய கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம்.என்.மீ. பண்டார ''தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை'' தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார்.

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அம்சங்கள் இதுவரை காலமும் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக நிலவி வந்த பாரிய பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வினை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் ஏனைய அரச சேவைகளில் பின்பற்றப்பட்டுவந்த நடைமுறை ஒழுங்குகளை ஆசிரிய சேவைக்கும் உள்ளடக்கியுள்ளது.

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை கீழ்க்குறிப்பிடும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டதுவாக இருக்கும்.

* கல்வி சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களைக் கேந்திரமாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதினால் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கும்போது மாணவர்களது தேவைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.
* கல்வியின் பண்புகள் விருத்திப் பணியை நிலையாகப் பேணுவதற்கு ஆசிரியர்களின் அறிவு, திறமை ஆகியவற்றை விருத்தி செய்யச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும். இடமாற்றக்கொள்கை மூலம் ஆசிரியர்களுக்கு தமது அறிவு,திறமை விருத்திக்கான சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.
* ஆசிரியர்களின் தொழில் பாதுகாப்புத் தொடர்பான நம்பிக்கையை உறுதி செய்யக்கூடியவாறான முறையில் மற்றும் சுதந்திரமான கற்பித்தல் வெளிப்பாடு, அநீதியான ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக தேவையற்ற அச்சமின்றி சேவையாற்றக் கூடியவாறும் மற்றும் சேவையின் திருப்தியை உயர்ந்த பட்சம் அடையக்கூடியவாறு ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும்.
* கல்வி தொடர்பான பிரதேச ரீதியில் காணப்படும் வேறுபாடுகளை முடியுமான அளவுக்குக் கட்டுப்படுத்தி மாணவனை அடிப்படையாகக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைத் தடையின்றி தொடர்ச்சியாக மேற்கொள்ளக் கூடியவாறு ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் அடிப்படை நோக்கமாக இருக்கவேண்டும்.
* ஏதாவது ஒரு பிரதேசத்திற்கு, பாடசாலைக்கு உரிய மனித வளங்களை நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு உரிய முறையில் ஆசிரிய சேவையில் உள்ள மனிதவளங்களை நியாயமான முறையில் பகிரங்கப்படுத்துவதாக ஆசிரியர் இடமாற்றக் கொள்கை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
* ஒரு பிரதேசத்தில் அல்லது கல்லூரியில் தொடர்ச்சியாக சேவையாற்றுவதன் மூலம் ஏற்படக்கூடிய ஒரு தலைப்பட்ச நிலைமை ஆசிரியர் தொழில் விருத்திக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துவதால் பல்வேறுபட்ட பிரதேசங்கள், பல்வேறுபட்ட சமூக, பொருளாதார மற்றும் கலாசாரச் சூழல் களில் உள்ள கல்லூரிகளின் சேவைக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும், பல்வேறு பட்ட அலுவல்களைப் பெற்றுக்கொண்டு தமது செயற்றிறனை விருத்தி செய்வதற்கும் சகல ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.
* இத்துறையில் மனித வளத்தை முறையான முகாமைத்துவத்தின் கீழ் உயர் மட்ட செயற்றிறனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்வதற்கு இந்தக் கொள்கையின் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

## இதுவரை நிலவிய பிரச்சினைகளுக்கு உகந்த தீர்வைக் காண உதவும்

* தேசிய இடமாற்றக் கொள்கையை விரிவாக மற்றும் நெகிழ்ச்சித் தன்மையுடன் ஆசிரியர் இடமாற்றச் சபை மூலம் அமுல் படுத்தவேண்டும்.

### ஆசிரியர் இடமாற்றச் சபைகள் செயற்படும் இடங்கள்

* வலயக் கல்வி அலுவலகங்கள்
* மாகாணக் கல்வி அலுவலகம்
* அமைச்சு

### மேன் முறையீட்டு சபையின் உள்ளடக்கம்

* இடமாற்றச் சபையை பிரதிநிதித்துவப் படுத்தும் ஓர் உத்தியோகத்தரையும்,
* திணைக்கள பொறுப்பாளரினால் பெயரிடப்படும் இடமாற்றச்சபையில் பிரதிநிதித்துவப்படுத்தாத இரண்டு பதவி நிலை உத்தியோகத்தர்களையும் தொழில்சங்கப் பிரதிநிதி ஒருவரையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

### சேவைக்காலம் தொடர்பான விடயங்கள்

இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு ஆசிரிய சேவை பிராமாணக் குறிப்பில் உள்ளடக்கப் பட்டுள்ள நிலையியற் குழுவினால் பெயரிடப்படும் பாடசாலை ஒன்றில் குறைந்த பட்ச சேவைக்காலம் சகல ஆசிரியர்களும் கடமையாற்றி இருக்கவேண்டும்.

* அதிகஷ்டப் பாடசாலைகள் அல்லது கஷ்டப் பாடசாலைகள் - 4 வருடங்கள் (குறைந்தபட்சம்)
* விருப்பமற்ற பாடசாலை - 4 வருடங்கள் (குறைந்தபட்சம்)
* விருப்பமான பாடசாலை - 3 வருடங்கள் (ஆகக்கூடியகாலம்)
* மிகவிருப்பமான பாடசாலை - 3 வருடங்கள் (ஆகக்கூடியகாலம்)

இதன் அடிப்படையில் ஆசிரியர்களின் சேவைக் காலத்தை உரியதாக்கிக் கொள்ள வேண்டும். இது தனித்தனியாக ஒவ்வோர் ஆசிரியர் தொடர்பாகவும் பதிவுசெய்யப் பட்டு பேணப்படவேண்டும்.

* பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் கொள்கை அடிப்படையில் அங்கீகரிக்கும் சந்தர்ப்பங்களில் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய நியமிக்கப்பட்ட பாடசாலையில் தொடர்ச்சியாக சேவையாற்ற வேண்டிய முழுக் காலத்தையும் பூரணப்படுத்த வேண்டும். (நியமன நிபந்தனையுடன் கூடிய சேவை)

### கஷ்டப் பிரதேச பாடசாலைகளின் சேவைக் காலத்தை ஒதுக்குவித்தல்

மேற்படுத்தப்பட்ட வகைப்படுத்தலுக்கு அமைய கஷ்ட அல்லது அதிகஷ்டப் பாடசாலை ஒன்றில் கட்டாய சேவைக் காலத்தை சகல ஆசிரியர்களும் பூர்த்தி செய்யவேண்டியதுடன் அக்கட்டாய சேவைக்காலத்துக்கு பின்னர் அதிகஷ்ட அல்லது கஷ்ட பாடசாலையொன்றில் சேவையாற்றும் ஆசிரியர் ஒருவருக்கு கஷ்டப் பாடசாலை சேவைக்கொடுப்பனவு வழங்கவேண்டும்.

கஷ்டப்பிரதேச பாடசாலைக்கு மாதம் 1500 ரூபாவும், அதிகஷ்டப் பிரதேச பாடசாலைக்கு மாதம் 2500 ரூபாவும் கொடுப்பனவாக வழங்கப்பட வேண்டும்.

### ஏனைய விசேட விடயங்கள்

* 53 வயதைத் தாண்டியுள்ள ஆசிரியர்களுக்கு அவர்களின் கோரிக்கையைத் தவிர இடமாற்றம் மேற்கொள்ளக்கூடாது.
* சுகாதாரக் காரணங்களின் அடிப்படையில் ஆசிரியர் ஒருவரினால் இடமாற்றம் கோரும் போது அரச வைத்திய சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.
* கர்ப்பிணித்தாய்மார் தொடர்பாக அவர்களின் விருப்பமின்றி இடமாற்றம் செய்யக் கூடாது.
* கர்ப்பிணித் தாய்மார்கள் இடமாற்றம் கோரும்போது வைத்திய அறிக்கை மூலம் உறுதிப்படுத்தவேண்டும்.
* மகப்பேற்றின் பின்னர் தாய் ஒருவருக்கு பிள்ளை கிடைத்து ஒருவருடம் அதை தமது நிரந்தர வதிவிடத்துக்கு அருகில் உள்ள பாடசாலைக்கு தற்காலிகமாக சேவையில் இணைத்துக் கொள்வதற்கான உரிமையை வழங்க முடியும். இதற்காக ஆசிரியைத் தாய்மார்கள் கோரிக்கைகளை சமர்ப்பிப்பது அவசியமாகும்.

ஆசிரியர்களின் சொந்தச் சுகாதாரத்துக்கு மேலதிகமாக ஆசிரியருடன் இணைத்துள்ள, நேரடியாக அழுத்தங்களை விடுக்கக்கூடிய கீழ். குறிப்பிட்ட குடும்பத்தின் அங்கத்தவர்களின் சுகாதார நிலைமை, இடமாற்றம் பெறுவதற்காகக் கருத்தில் கொள்ளப்படும் (கணவன், பிள்ளைகள், பெற்றோர்/ கணவனின் பெற்றோர்).

### இடமாற்றங்களுக்கு எதிரான மேல் முறையீடு

இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர் அந்த மாற்றத்துக்கு எதிராக முறைப்பாடு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அம்முறைப்பாட்டிற்கு மேல்முறையீட்டுச்சபையின் பதில் கிடைக்கும் வரை சேவையாற்றிய பாடசாலையில் தொடர்ந்து சேவையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

மேல்முறையீட்டுச் சபையின் தீர்மானம் இடமாற்றம் வழங்கப்பட்ட தினம் தொடக்கம் ஒருமாத காலத்துக்குள் உரிய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

### ஆசிரியர் இடமாற்றச் செயற்பாட்டிற்குரிய கால எல்லை

| விடயம் | கால எல்லை |
|---|---|
| 1) ஆசிரியர் இடமாற்றங்களுக்குரிய தகவல்களைத் திரட்டுதல் | மே 31 ஆம் திகதிக்கு முன்னர் |
| 2) ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்களை கோரல் | யூன் - 1 - யூன் 30 வரை |
| 3) இடமாற்ற சபையின் கூட்டத்தை நடத்தல் | யூலை 1 - யூலை 31 வரை |
| 4) ஆசிரியர் சபையின் பரிந்துரையைப் பெறல் | ஓகட்ஸ் 1 - ஓகஸ்ட் 15 வரை |
| 5) இடமாற்றக் கடிதத்தை வழங்கல் | செப்ரெம்பர் 15 - செப்ரெம்பர் 30 வரை |
| 6) மேல் முறையீடுகளை பொறுப்பேற்றல் | ஒக்ரோபர் 1 - ஒக்ரோபர் 15 வரை |
| 7) மேல்முறையீட்டு சபைகளின் தீர்மானங்களைப் பெற்றுக் கொள்ளல் | நவம்பர் 1 முன்னர் |

என ஆசிரியர்களின் இடமாற்ற செயற் பாட்டிற்கு வரையறை செய்யப்பட்டுள்ளன.

### இடமாற்றம் மேற்கொள்ளும் காலஎல்லை

இடமாற்றம் தொடர்பான செயற்பாடுகள் மே மாதம் 31 ஆம் திகதி ஆரம்பித்து நவம்பர் 1 ஆம் திகதி முடிவுறுத்த வேண்டும். ஆண்டின் ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் அமுல் படுத்த வேண்டும்.

- ஞானஆதவன்.




சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், தொழில்நுட்பவியலாளர் வேதநாயகம், சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் கே.சண்முகலிங்கம் ஆகியோர் பாடசாலைச் சமூகத்தினரால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் திருமதி கேதீஸ்வரன் வெற்றிபெற்ற இல்லத்தின் தலைவருக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் பிரதம விருந்தினரான யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் மேடையில் அமைந்திருப்பதையும் படத்தில் காணலாம். (218)



சுன்னாகம் கோட்டைக்காடு அ.த.க. இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிராணிகளாக வேடம் போட்டு - முகமூடி அணிந்து - பாடசாலை மாணவர்கள் உடற்பயிற்சி செய்வதைப் படத்தில் காணலாம். (202)



பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி மற்றும் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியக்குழு சகிதம் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (202)

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 . 05 . 1943



மறைவு 24 . 03 . 1998

## திருமதி பிலோமினா செல்லையா

ஆண்டுகள் பத்து போனதம்மா
ஆறவில்லை உம் நினைவு
அணையாத எம் அன்புத் தீபமே!
அல்லும் பகலும் அனுதினமும்
அன்புடன் உம் நினைவில்
வாழ்கின்றோம் அன்பு அம்மா.

தகவல்:
சங்கரப்பிள்ளை றோட், ஆனைக்கோட்டை. (72193) கணவர், உற்றார், உறவினர்.

## கொழும்புத்துறையில் ஆலயம் ஒன்றில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம்,மார்ச்24

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் திருடர்கள் கைவரிசை காட்டியுள்ளனர்.

ஆலய மண்டப கூரை, முகட்டு ஓடுகள் பலவற்றை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டு சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (202-224)

## நுண்கலை மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப் பீடத்தின் 2002/2003 இறுதிவருட மாணவர்களால் எடுக்கப்பட்ட குழுப்படத்தை பீடத்தின் கவின்கலை மன்றத்தில் இம் மாதம் 24 ஆம், 26ஆம், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# சேவையை நயந்து பாராட்டுகின்றோம்

## திரு.கு.மகாலிங்கம்



(உப அதிபர், யா/கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை)

*எமது வித்தியாசாலையில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் இருப்பத்தாறு வருடங்கள் கல்விப்பணி ஆற்றி அகவை அறுபதில் இன்று (24.03.2008) இல் இளைப்பாறும் திரு.கு.மகாலிங்கம் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு இளைப்பாறும் காலத்திலும் கல்விப்பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**சேவை விவரம்:**

- முதல் நியமனம் 01.03.1972 இ/மில்லவிட்டாய த.வி., இரத்தினபுரி
- பலாலி ஆசிரிய பயிற்சி 29.01.1978- 31.12.1979
- தி/கிளிவெட்டி மகாவித்தியாலயம் 01.01.1980- 31.12.1981
- கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித ஆசிரியராக 01.01.1982- 20.01.2007
- உப அதிபராக 21.01.2007- 23.03.2008

**ஆசிரியர் கழகம்.**
**யா/கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலை.** (72254)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 05 . 1932



மறைவு 05 . 04 . 2007

இணுவில்

## அமரர் இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம்

(வடமாநில முன்னாள் கல்விப்பணிப்பாளர்)

*திதி: 24.03.2008*

ஆண்டொன்று கழிந்தபோதும்
ஐய நின் நினைவு நெஞ்சில்
ஈண்டு நிலைத்திருந்து எமை
இனிதே வழி நடத்தும்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

89/14, பசல்ஸ் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06. மக்கள், மருமக்கள், பேரர், உறவினர்கள். (72244)

# நன்றிகள் பல கூறி நாடறிய வாழ்த்துகின்றோம்!

சாவகச்சேரி சமுர்த்தி வங்கியில் பணிபுரியும் மட்டுவில் கிழக்கு பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திருமதி தவராஜா இந்துமதி அவர்கள்**

என்னால் தவறவிடப்பட்ட சுமார் ஒரு லட்சம் பெறுமதி வாய்ந்த தங்க நகையை கண்டெடுத்து உரிய முறையில் என்னிடம் ஒப்படைத்துள்ளார். அவருடைய நேர்மைத் தன்மையைப் பாராட்டி, உவந்து, எனது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சீர்சிறப்போடு அவரும் அவருடைய குடும்பத்தினரும் வாழ என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

"பண்புடையார்ப் பண்டுண்டு உலகம்"
நன்றி! நன்றி! நன்றி!

கண்டி வீதி, சாவகச்சேரி. **திருமதி உ.பரமேஸ்வரி.** (72269)






## தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## 26ஸ்ரீ 5296 லொறி விற்பனைக்கான கூறுவிலை கோரல்

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான 26ஸ்ரீ 5296 இலக்கமுடைய **இசுசு லொறி விற்பனைக்குள்ளது**. ஆகவே பெற விரும்புவோர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை அனுப்புபவர்கள் 29.03.2008 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். கூறுவிலை தங்கள் முன்னிலையில் 29.03.2008 பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும்.

தெ.மே.ப.நோ.கூ.சங்கம், கைதடி. (F/551950) **சி.தங்கநாதி,** *பொதுமுகாமையாளர்.*

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## திடீர்ப் பொதுத் தேர்தலை நாடுமா அரசு?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது இராணுவத் தந்திரோபாயத் திட்டங்கள் எதிர்பார்த்த வெற்றிகளை - எதிர்பார்த்த காலவரையறைக்குள் - தராதமையால் வேறு வழிவகைகளை நாடவேண்டிய சிக்கல் கொழும்பு அரசுத் தலைமைக்கு ஏற்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் விவரிக்கின்றன.

பல்வேறு உதிரிக் கட்சிகளின் ஒட்டுமொத்த ஆதரவை - தனது நிறைவேற்று அதிகாரப் பலம் என்ற பூச்சாண்டியைக் காட்டி - வரித்துக் கொண்டிருக்கும் மஹிந்த அரசு, அந்த ஆதரவைத் தொடர்ந்து தக்கவைத்திருப்பதை யுத்த களத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் கிடைக்கக்கூடிய வெற்றி உறுதிப்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தது.

ஆனால், எதிர்பார்க்கப்பட்ட அந்த வெற்றியோ கானல் நீர்போலத் தள்ளித் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கின்றது - எட்டாக் கனியாக.

அதைத் தட்டிப்பறிப்பது இப்போதைக்குச் சாத்தியமில்லை என்ற யதார்த்தம் 'ராஜபக்ஷ அண்ட் பிறதர்ஸ்' கம்பனிக்குப் புரியத் தொடங்கிவிட்டதால் ஆட்சியைக் கொண்டிழுக்க - அல்லது நீடிக்க - புதிய மாற்றுவழி குறித்து யோசிக்கின்றது மஹிந்தரின் தலைமை.

கடந்த வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது - கடைசிக் கட்டத்தில் - வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியதன் மூலம் மஹிந்தரின் அரசைக் காப்பாற்றியது ஜே.வி.பி.

ஆனால் அத்தகைய உதவி இனிமேலும் ஜே.வி.பியிடம் இருந்து கிட்டுவது துர்லபமே என்று உணர்ந்துள்ள அரசுத் தலைமை அதனால் மாற்றுவழி தேட முயல்கின்றது.

பொருள்களின் விலைவாசியும் எக்கச்சக்கமாக எகிறி, இராணுவ யுத்தக் களமுனையில் எதிர்பார்த்த வெற்றிகளை நாட்டுக்கு இந்த அரசு பெற்றுக்கொடுக்கவும் தவறியுள்ள இந்தச் சூழலில், இனிமேலும் இந்த அரசுக்கு முண்டு கொடுத்துத் தனது மூக்கை உடைத்துக்கொள்ள ஜே.வி.பி. அப்படி ஒன்றும் மிக முட்டாள் தனமான கட்சியல்ல.

எனவே, இன்னொரு தடவை நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பில் அரசு தப்பிப் பிழைக்க ஜே.வி.பி. உதவும் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமுமில்லை; பலனுமில்லை.

ஆகவே, அத்தகைய வாக்கெடுப்பு நெருக்கடி ஒன்று நாடாளுமன்றுக்கு வருவதற்கு முன்னரே தனது நாடாளுமன்றப் பெரும்பான்மையை உறுதிப்படுத்துவது குறித்து ஆலோசிக்கும் மஹிந்தரின் அரசுத் தலைமை, புதிய பொதுத்தேர்தல் ஒன்றை நாடுவதே அதற்கு ஒரே வழி எனச் சிந்திக்கத் தொடங்கியிருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

நடந்து முடிந்த மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலையும், நடக்கப்போகின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலையும், மேற்படி பொதுத் தேர்தலுக்கான கள நிலைவரத்தை உரசிப் பார்க்கும் அமிலச் சோதனையாகக் கருதிச் செயற்படுகின்றது அரசு.

திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றை இந்த வருட மத்தியில் - பெரும்பாலும் ஜூலை, ஓகஸ்ட் மாதத்தில் - அரசு நடத்தத் திட்டமிடுகின்றது என்ற தகவலை ஜே.வி.பியின் முன்னணிப் பிரமுகரான அனுரகுமார திஸநாயக்கவும் வெளியிட்டிருக்கின்றார்.

அப்படி ஒரு பொதுத் தேர்தலை, தற்போது பல்வேறு கட்சிகளிலிருந்தும் பிய்த்து உதறிக் கொண்டு வந்து அமைச்சர் பதவிகளுக்காகத் தன்னுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் உதிரிகளை வைத்துக்கொண்டு சந்திக்க விழைகிறது அரசு.

அம்முயற்சியில் அரசு எதிர்பார்த்த வெற்றியை ஈட்டுமா அல்லது யுத்த முனையில் 'இலவு காத்த கிளியாக'ப் பார்த்திருப்பது போன்ற நிலைமையைத்தான் அதுவும் தருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால், அமைச்சுப் பதவிகளுக்காக அரசுத் தரப்போடு போய் ஒட்டிக்கொண்ட உதிரிகளுக்கு அத்தகைய திடீர்ப் பொதுத் தேர்தல், அவர்களின் அரசியல் வாழ்வுக்கான மரணப் பொறியாகவே அமையும் என்பதை மட்டும் இப்போதே அறுதியிட்டுக் கூறிவிடலாம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றிலிருந்து அதிருப்திக்குழு என்ற பெயரில் அவ்வப்போது அரசுத் தரப்புக்கு - அமைச்சர் பதவிகளுக்காக - 'பல்டி' அடித்து, அணிமாறி, உதிரிகளாகத் தம்மை அரசுடன் இணைத்துக் கொண்டவர்களுக்கு அரசின் உத்தேச திடீர் பொதுத் தேர்தல் திட்டம் இப்போதே வயிற்றில் புளியைக் கரைக்கத் தொடங்கிவிட்டது.

அப்படி ஒரு திடீர்ப் பொதுத்தேர்தல் நடக்குமானால், இப்படி 'ஒரிஜினல் ' கட்சியிலிருந்து 'பல்டி' அடித்த எவருமே மீண்டும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத் தேற மாட்டார்கள் என்பது அவர்களுக்கே நன்கு தெரியும்.

ஆனால், இவ்வாறு தமது அரசியல் எதிர்காலத்தையே அரசியல் சூதாட்டத்தில் பணயம் வைத்து, அரசுத் தலைமைக்கு முண்டுகொடுக்க முன்வந்த இந்தக் 'குத்துக் கரணங்களை 'ஒரேயடியாகக் கைவிட்டு, தனது அரசைத் தக்கவைக்கும் முயற்சிக்காக இத்தகைய எந்த வாய்ப்பான நடவடிக்கையையும் எடுப்பதற்கு அரசுத் தலைமை பின்நிற்காது என்பதும் தெளிவு.

அத்தகைய முயற்சியாக திடீர்ப் பொதுத் தேர்தலை மஹிந்தரின் தலைமை அறிவிக்கும்போதுதான், அதுவரை அணிமாறி, மஹிந்தரின் அரசுக்கு முண்டு கொடுத்துத் தவறிழைத்தோர், தமது பிழையை உணர்ந்து கொள்ள முற்படுவர். ஆனால் அத்தவறுக்கு பிராயச்சித்தம் செய்யக்கூட அப்போது அவர்களுக்குக் காலம் கடந்துவிட்டிருக்கும் என்பதுதான் யதார்த்த நிலைமையாக இருக்கும்.

# இலங்கைக்கு இந்திய ஆயுத உதவி; கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை,மார்ச்24

இலங்கை இராணுவத்திற்குத் தொடர்ந்து ஆயுத உதவி மற்றும் இராணுவப் பயிற்சிகளை இந்திய அரசு வழங்குவதைக் கண்டித்து தமிழர் விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் நேற்றுமுன்தினம் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.



ஆர்ப்பாட்டத்திற்குத் தமிழகப் பொலிஸார் தடை விதித்திருந்த போதும் தடையை மீறி இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

பழ.நெடுமாறன் தலைமையில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈழத்தமிழர்களையும் தமிழக மீனவர்களையும் தொடர்ந்து கொன்று குவிக்கும் சிங்கள இராணுவத்திற்கு ஆயுத உதவி வழங்கும் இந்திய அரசையும் அதனைத் தடுக்காத தமிழக அரசையும் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோரை காவல்துறையினர் கைதுசெய்தனர். 50 இற்கும் மேற்பட்ட பெண்களும் சிறார்களும் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட அனைவரும் இரவு 10.30 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்.

பெரியார் திராவிடர் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன், தமிழ்த்தேச விடுதலை இயக்கத்தின் செயலாளர் தியாகு, தமிழ்த் தேசியக் பொதுவுடமைக் கட்சிப் பொதுச்செயலாளர் பெ.மணியரசன் மற்றும் தமிழ்நாடு மார்க்சியப் பெரியார் பொதுவுடமைக்கட்சி, புரட்சிகர இளைஞர் முன்னணி, புரட்சிகர ஜனநாயக தொழிலாளர் முன்னணி, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தினரும் பெருமளவிலான தமிழ் உணர்வாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

(202)

## வலி. கிழக்கில் கச்சான் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்24

வலி.கிழக்கு பிரதேசத்தில் விவசாயிகளால் இம்முறை மேற்கொண்ட கச்சான் செய்கை தற்போது பெய்து பெரும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் இம்முறை விவசாயிகள் அதிக அக்கறை காட்டி கச்சான் செய்கையில் ஈடுபட்டனர்.

கச்சான் பயிர்கள் நல்ல நிலையிலும் விளையும் தறுவாயிலும் இருந்த சமயம் தற்போது பெய்த கடும் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கச்சான் பயிரிடப்பட்ட தோட்ட நிலங்களில் அதிகளவு வெள்ளம் தேங்கியமையே பாதிப்புக்கு காரணம் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (202-135)

### அனுமதிப்பத்திரத்தில் மோசடி செய்து

## சட்டவிரோதமாக மணல் கடத்திய சந்தேக நபர் விளக்கமறியலில்

யாழ்.அரச அதிபரினால் வழங்கப்பட்டிருந்த மணல் அனுமதிப் பத்திரத்தில் மோசடி செய்து சட்டவிரோதமாக மணல் கடத்திச் சென்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த சந்தேக நபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் இன்னுமொரு லொறிச்சாரதியையும் மணல் அனுமதிப் பத்திரத்தின் உரிமையாளரையும் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு அச்சுவேலிப் பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார்.

புத்தூரைச் சேர்ந்த சிவராஜசிங்கம் ஜீவிதன் என்பவர் வராத்துப் பளையிலிருந்து அனுமதியின்றிச் சட்டவிரோதமாக மணல் கடத்தியபோது நெல்லியடிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

இவர் யாழ். அரச அதிபரால் வழங்கப்பட்ட மணல் அனுமதிப்பத்திரத்தில் மோசடி செய்திருந்தமையும் விசாரணையில் தெரியவந்தது. அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது சந்தேக நபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். மேலும் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கும் புத்தூரைச் சேர்ந்த மற்றுமொரு லொறிச் சாரதியையும் அரச அதிபரிடம் அனுமதிப்பத்திரம் பெற்றவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (202-218)

(மற்றொரு செய்தி 6ஆம் பக்கத்தில்)

## சிற்றுண்டிகளின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்24

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு மற்றும் விறகுத் தட்டுப்பாடு போன்றவற்றைக் காரணம் காட்டி சிற்றுண்டி வகைகளின் விலைகள் தேநீர்க் கடைகளில் கிடுகிடுவென அதிகரிக்கின்றன என்று நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

தோசை, பிட்டு, இட்லி, இடியப்பம் மற்றும் வடை, றோல்ஸ், பற்றிஸ் போன்றவற்றின் விலைகள் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 'பிளேன் ரீ' சில தேநீர் சாலைகளில் 10 ரூபாவாகவும் பால் தேநீர் 17 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

சில தேநீர்சாலைகளில் 'பிளேன் ரீ' 8 ரூபாவாகவும் பால் தேநீர் 15 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு மற்றும் விறகின் தட்டுப்பாடே உணவு வகைகள் மற்றும் சிற்றுண்டி வகைகளின் விலை ஏற்றத்திற்குக் காரணம் என்று கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(202-224)

## கால்நடைகளுக்குத் தேவையான குடிதண்ணீரைக் காற்றாடி மூலம் இறைக்க நெடுந்தீவில் திட்டம்

நல்லூர்,மார்ச்24

நெடுந்தீவில் காற்றாடியின் மூலம் கால்நடைகளுக்குக் குடிதண்ணீர் கிடைப்பதற்கான திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.தம்பிராசா தெரிவித்தார்.

பரந்த வெளிகளில் உணவுக்காக அலையும் குதிரைகள் உட்பட ஆடு, மாடுகள் போன்றவை குடிதண்ணீருக்காகப் பொதுமக்கள் குளிக்கும் கிணறுகளை நாடித் திரிகின்றன. எனினும் அவைகளுக்குப் போதிய அளவு குடிதண்ணீர் கிடைப்பதில்லை. கடும் வரட்சிக் காலங்களில் குளங்கள், கேணிகள் தண்ணீறின்றி வரண்டு காட்சியளிக்கிறன.

இந்த நிலையில் கால்நடைகள் குடிதண்ணீரைப் பெறக்கூடியதாக தீவின் பரந்த வெளிகளில் காணப்படும் கிணறுகளில் இருந்து காற்றாடி மூலம் நீரிறைத்து அதற்கென அமைக்கப்படும் தொட்டிகளில் நீரைத் தேக்கி வைக்கக் கூடியதாக இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் கால் நடைகள் போதியளவு குடிதண்ணீரைப் பெறக்கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(202-111)

## நெடுந்தீவில் மழை காரணமாக பனங்கிழங்கு உற்பத்தி பாதிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்24

கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் பெரும் மழை காரணமாக நெடுந்தீவுப் பகுதியில் பனங்கிழங்கு உற்பத்தி நடவடிக் கை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பனங்கிழங்கு உற்பத்தியில் நெடுந்தீவில் 90 வீதமான மக்கள் வருடந்தோறும் ஈடுபடுகின்றனர். பனங்கிழங்கு மிகவும் கூடுதலாக இங்கு உற்பத்தி செய்யப்படுவதுண்டு.

அதில் இருந்து பலதரப்பட்ட உப உணவுப் பொருள்கள் தயாரிக்கத்தக்கதாக ஒடியல், புளுக்கொடியல் போன்றவை பெரிய அளவில் உற்பத்தி பண்ணப்பட்டு வெளியிடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவது வழமை.

இம்முறை மழை காரணமாக பனங்கிழங்கு உற்பத்தி பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் பிடுங்கிய கிழங்குகளைக் கூட ஒடியல், புளுக்கொடியலாகப் பதப்படுத்த முடியாது போய்விட்டதாகவும் கிழங்குகள் சேதமடைந்து விட்டதாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதேசமயம் மிகவும் கூடுதலான விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த எள் பயிர்ச் செய்கையாளர்களும் அவை முற்றாகப் சேதமடைந்த நிலையில் தமக்குப் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். (202-111)

### நாளை

| | |
|---|---|
| பங்குனி - 12 | 25.03.2008 செவ்வாய்க்கிழமை |
| திதி: சதுர்த்தி | முழுவதும் |
| நட்சத்திரம் : | சுவாதி மு.ப. 10.48வரை |
| சுபநேரம் : | 10.45 - 12.15 |
| ராகுகாலம் : | 03.15-04.45 |

## குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு மேலும் ஒரு தொகுதி பாடநூல்கள் இந்த வாரம் எடுத்துவரப்படும்

அச்சுவேலி,மார்ச்24

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாட புத்தகங்களில் மேலும் ஒரு தொகுதி இந்த வாரம் "யால" கப்பல்மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது.

மூன்றாம் தடவையாக எடுத்து வரப்படும் 2008ஆம் ஆண்டுக்கான இலவசப் பாடப்புத்தகத்தில் தரம் 11 இற்குரிய கணிதம், விஞ்ஞானம், தமிழ் மொழியும் இலக்கியமும் ஆகிய பிரதான பாடத்துறைக்கான புத்தகங்கள் உட்பட இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் அனுப்பிவைக்கப் படவிருப்பதாக கல்வி வெளியீட்டு பிரதி ஆணையாளர் லெனின் மதிவாணம் தெரிவித்தார்.

சில பாடப்புத்தகங்கள் அச்சிடுவதில் ஏற்பட்ட தடங்களினால் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டதாகவும் அவை தொடர்ந்து அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(202-11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராக கடமையாற்றும்

**தில்லையம்பலவாணர் விமலன் M.A.**

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றதையிட்டு மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கலைப்பிட நண்பர்கள் (99/2000),**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

[72224]


# PC UPGRADES தரமுயர்த்தல்



உங்கள் பாவனையில் உள்ள கணனிகளை தற்கால தொழில் நுட்பத்திற்கேற்ப அதி நவீன கணனிகளாக மாற்றித்தரப்படும்

- உங்கள் கணனிகளின் பரிசீலனை இலவசம்
- உங்கள் வீட்டிற்கு / அலுவலகத்திற்கு எமது தொழில் நுட்பவியலாளர்கள் வந்து பரிசீலிக்கும் வசதி

**MICRO PC SYSTEMS**

யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி வெதுகமம் வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536


## மரண அறிவித்தல்

### திருமதி சிவகாமசுந்தரி நவசுந்தரலிங்கம்



திருநெல்வேலி வடக்கு, மடம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகாமசுந்தரி நவசுந்தரலிங்கம் நேற்று (22.03.2008) சனிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நேற்று (23.03.2008) நடைபெற்றன.

குறிப்பு: 23.03.08 உதயன் 02ஆம் பக்கத்தில் வெளிவந்த மரண அறிவித்தல் எம்மால் தவறுதலாக "சிவகாமசுந்தரி நாராயணலிங்கம்" என பிரசுரத்திற்காக வழங்கப்பட்டது. சிவகாமசுந்தரி நவசுந்தரலிங்கம் என்பதே சரியானது என தெரிவிக்கின்றோம்.

[72283] நா.சோதிலிங்கம்


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

970 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம் **06 07 42 44**

**21-03-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 5585705 - 5596655

ஜக்பொட் பரிசு ரூபா. 2,519,500/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 226,191 | 10/- | 2,261,910/- |
| 2 இலக்கங்கள் | 20,723 | 20/- | 414,460/- |
| 1 இல. + லக்கினம் | 20,498 | 30/- | 614,940/- |
| 2 இல. + லக்கினம் | 1,894 | 100/- | 189,400/- |
| 3 இலக்கங்கள் | 575 | 500/- | 287,500/- |
| 3 இல. + லக்கினம் | 45 | 5,000/- | 225,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,519,500/- | - |
| மொத்தம் | | | 4,193,210/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 269,933 | | 5,216,710/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,024,500/-

தொடர் இலக்கம் 4705405 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 மார்ச் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 5586312-0-95 |
| மாத்தளை | 5593181-2-98 |
| கண்டி | 5586857-3-31 |
| இரத்தினபுரி | 5595308-5-30 |
| மட்டக்களப்பு | 5596405-7-96 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


### கட்டுடை சைவ வித்தியாசாலையில் நிகழ்வுகள்

கட்டுடை சைவ வித்தியாசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியும், புதிதாக அமைக்கப்பட்ட பெயர் வளைவு திறப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

வித்தியாசாலை அதிபர் த.கடவுள் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் சு.இ.சந்திரலிங்கமும் கலந்து கொள்வர்.

(202-135)


### பண்டத்தரிப்பு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்டவர்களுக்கு

பண்டத்தரிப்பு (ஜே/146) கிராம அலுவலர் பிரிவில் தேசிய அடையாள அட்டைக்கு முன்னர் விண்ணப்பித்திருந்த 21 பேருக்கான தேசிய அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

உரியவர்கள் தமது பணிமனையில் இதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கிராம அலுவலர் எஸ்.அருள்ஞானானந்தன் கேட்டுள்ளார்.

(202-135)

## ஆண்டொன்று கடந்தாலும் ஆறாது நம் துயரம்.........



தோற்றம் 04.03.1941 — மறைவு 05.04.2007

அமரர்

# க.சி.இராஜேஸ்வரன்

*திதி : 24.03.2008, திருதியை*

இல்லத்தின் வேராக இல்லறத்தில் விழுதாக
எம்மைத் தாங்கும் மரமாகி நின்றீர் ! - அப்பா
உறவுகள் ஆயிரம் இருப்பினும் - அப்பா
உங்கள் அன்பினை உள்ளம் தேடுதே
ஆண்டொன்று ஆனாலும் ஆறாது நம் துயரம் : மாறாது நம் கவலை
ஏற்றிய தீபமாய் நெஞ்சில் வீற்றிருப்பீர் !
போற்றிடுவோம் உம்மை !!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

105, கலைமகள் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அன்பு மனைவியும் பிள்ளைகளும்

உ

# விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிகை

*ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான சர்வசித்து வருஷம் பங்குனிமாதம் 11 ஆம் நாள் இன்று (24.03.2008) திங்கட்கிழமை கிருஷ்ணபட்ச திருதியை திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 09.25 மணி முதல் 10.40 மணிவரையுள்ள இடபலக்கின சுப முகூர்த்தத்தில்*

பிரம்மஸ்ரீ சிவஞான ஐயர்
தம்பதிகளின் பௌத்திரியும்
பிரம்மஸ்ரீ கெங்காசிவக்குருக்கள்
கமலாம்பிகை தம்பதிகளின்
ஏக புத்திரி திருநிறை செல்வியும்
பிரம்மஸ்ரீ பாலச்சந்திரக்குருக்கள்
பராசக்தி தம்பதிகளின்
பெறாமகளுமாகிய
சௌபாக்கியவதி
**சுசிலாவை**

பிரம்மஸ்ரீ ஏ.பா.சர்வேஸ்வரக்குருக்கள்
சாரதாம்பாளின் பௌத்திரனும்
பிரம்மஸ்ரீ ரஞ்சிதானந்தக் குருக்கள்
கல்யாணி தம்பதிகளின்
புத்திரனுமாகிய
திருநிறை செல்வன்
சிரஞ்சீவி
**ஜெயராஜக் குருக்களுக்கு**

*கன்னிகாதானம், பாணிக்கிரஹண, திருமாங்கல்யதாரணம் செய்ய எல்லாம் வல்ல பாலமுருகப் பெருமானினதும், திருமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளினதும், ஸ்ரீ கண்ணகி அம்மனின் திருவருளோடு பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மேற்படி முகூர்த்தம்* **உவர்மலை ஸ்ரீ கண்ணகி அம்பாள் கோயில் திருக்கல்யாண மண்டபத்தில்** *நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் பந்து மித்திரர் சகிதம் வருகை தந்து புதுமண த் தம்பதிகளை ஆசீர்வதித்து வாழ்த்தி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்*

பிரம்மஸ்ரீ. கெங்காசிவக் குருக்கள்
கமலாம்பிகை தம்பதிகள்
ஸ்ரீ பாலமுருகன் கோயில்
பாலையூற்று, திருகோணமலை
0777384046

பிரம்மஸ்ரீ. ரஞ்சிதானந்தக்குருக்கள்
கல்யாணி தம்பதிகள்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
கோயில், திருகோணமலை.
026 5671818

[72280] (இருவீட்டார் அழைப்பு)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 04 04 1964 — இறப்பு 25 02 2008



அமரர்

### வேலுப்பிள்ளை இராசலிங்கம் (சந்திரன்)

**(உரிமையாளர்-சந்திரன் வெற்றிலைக் கடை)**

23.02.2008 அன்று காலமான எங்கள் அப்பா வேலுப்பிள்ளை இராசலிங்கம் (சந்திரன்) அவர்களின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (24.03.2008) திங்கட்கிழமை மு.ப 11மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பை அன்புள்ளம் கொண்டவர்களுக்கு இனங்கண்டு வழங்க முடியவில்லை. இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)*

*மந்துவில் கிழக்கு,*
*கொடிகாமம்.*

(சீ/551955)

பிள்ளைகள்
**கஸ்தூரி, கல்யாணி.**

### மேற்கிந்தியத் தீவுகளுடனான முதல் டெஸ்ட்

# இலங்கை சிறப்பான ஆரம்பம்



கயானா, மார்ச் 24

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியை இலங்கை அணி சிறப்பாக ஆரம்பித்துள்ளது. நேற்று முன்தினம் நிறைவுபெற்ற முதல்நாள் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 269 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மலிந்த வர்ணபுர டெஸ்ட் அரங்கில் தனது கன்னிச் சதத்தை பூர்த்திசெய்து இலங்கை அணியின் ஓட்டக்குவிப்புக்கு உதவிபுரிந்தார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள மஹேல ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கைக் கிரிக்கெட் அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடவுள்ளது. டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்றுமுன்தினம் கயானாவில் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வென்ற மஹேல ஜெயவர்த்தன முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வுசெய்தார்.

ஆரம்ப வீரர்களாக மைக்கல் வன்டோட்டும், மலிந்த வர்ணபுரவும் களமிறங்கினார்கள். இருவரும் ஆரம்பத்திலிருந்தே மிகவும் பொறுமையாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார்கள். மதிய போசன இடைவேளையின் போது இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அபாரமாக ஆடிய வன்டோட் 91 பந்துகளில் அரைச்சதத்தை எட்டினார். முதல் விக்கெட்டுக்காக 130 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் ரெய்லரின் வேகத்தில் மைக்கல் வன்டோட் (52 ஓட்டங்கள்) எல்.பி.டபிள்யூ. ஆனார்.

தொடர்ந்து களம் புகுந்த குமார் சங்ககார சிறப்பாக ஒத்துழைப்புக் கொடுக்க மலிந்த வர்ணபுர டெஸ்ட் அரங்கில் தனது முதலாவது சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார். வர்ணபுர பங்குபற்றும் 3ஆவது டெஸ்ட் போட்டி இதுவாகும். இரண்டாவது விக்கெட்டுக்காக 75 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் மலிந்த வர்ணபுர 120 ஓட்டங்களுடன் பிராவோவின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். 226 பந்துகளை எதிர்கொண்ட அவர், 14 பவுண்டரிகளையும் தனது ஓட்ட எண்ணிக்கையில் சேர்த்திருந்தார்.

50 ஓட்டங்களைச் சேர்த்திருந்த சங்ககரா ரெய்லரின் வேகத்தில் சிமித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். டெஸ்ட் அரங்கில் சங்ககாரவுக்கு இது 25ஆவது அரைச்சதமாகும். தொடர்ந்து களம்புகுந்த திலான் சமரவீர ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி 90 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 269 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மஹேல ஜெயவர்த்தன 25 ஓட்டங்களுடனும், டில்சான் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலிருந்தனர்.

போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் நேற்று நடைபெறவிருந்தது.

## முழுத் திறமையையும் வெளிப்படுத்துவோம்

### கும்ளே பேட்டி

சென்னை, மார்ச் 24

"எங்களது முழுத் திறமையையும் வெளிப்படுத்தி விளையாடினால் தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரைக் கைப்பற்ற முடியும்." - என இந்திய அணித் தலைவர் அனில் கும்ளே தெரிவித்துள்ளார்.

"முதல் போட்டி நடைபெறவுள்ள சேப்பாக்கம் மைதானத்தின் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு அதிகம் ஒத்துழைப்பு வழங்கும் என நினைக்கிறேன். தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். சொந்த நாட்டில் ஆடுவது எங்களுக்கு சாதகமான விடயம். எங்களது முழுத் திறமையையும் வெளிப்படுத்தி விளையாடினால் தொடரைக் கைப்பற்ற முடியும்.

"சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நீண்ட அனுபவம் உள்ள கேரி கேஸ்ரன் பயிற்சியாளராகவுள்ளமை இந்திய அணியை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல உதவும்.' - இவ்வாறு அனில் கும்ளே கூறினார்.

### நியூஸிலாந்துடனான மூன்றாவது டெஸ்ட்....

# 176 ஓட்டங்களால் இங்கிலாந்து முன்னிலை

நேப்பியர், மார்ச் 24

நேப்பியர் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் பெற்ற 253 ஓட்டங்களுக்கு பதிலளித்த நியூஸிலாந்து அணி சைட்பொற்றமின் வேகத்தில் மிரண்டு 168 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

85 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிவரும் இங்கிலாந்து அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேரம் முடிவடையும் போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 91 ஓட்டங்களைப் பெற்றிருந்து. இதன்படி இங்கிலாந்து அணி தற்போது 176 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

நியூஸிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. ஹமில்ரனில் நடந்த முதல் போட்டியில் நியூஸிலாந்தும், வெலிங்டனில் நடந்த இரண்டாவது போட்டியில் இங்கிலாந்தும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மூன்றாவது போட்டி, நேப்பியரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் நாள் ஆட்டம்

இங்கிலாந்து அணியின் தொடக்க வீரர்களாக அலஸ்ரியர் குக் மற்றும் மைக்கல் வோகன் ஆகியோர் களமிறங்கினர். நியூஸிலாந்தின் அறிமுகப் பந்துவீச்சாளர் சௌத்தி வீசிய 4ஆவது ஓவரில் வோகன் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஸ்ரோரஸும் சௌத்தி வீசிய 6வது ஓவரில் 'டக் அவுட்' ஆகி வெளியேறினார். அடுத்த ஓவரிலேயே குக் 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மார்டின் பந்தில் 'போல்ட்' ஆனார். இங்கிலாந்து அணி 7ஆவது ஓவர் முடிவின் போது, 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து பரிதாப நிலையில் இருந்தது.

தொடர்ந்து 9 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பெல், எலியற்றின் பந்தில் வெளியேறினார். 4 விக்கெட்டுகளுக்கு 36 ஓட்டங்களை எடுத்து தடுமாறிய நிலையில், பீற்றர்ஸனுடன் ஜோடி சேர்ந்த கொலிங்வூட் கொஞ்சம் பொறுப்பாக விளையாடினார். இருவரும் 5ஆவது விக்கெட்டுக்காக 89 ஓட்டங்களைச் சேர்த்தனர். 30 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கொலிங்வூட், பட்டேலின் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அடுத்து வந்த அம்புரோஸ் 11 ஓட்டங்களில் வெளியேறினார்.

பீற்றர்ஸனுடன் 7ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த போர்ட், சிறப்பாக விளையாடினார். இருவரும் சேர்ந்து 61 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். அபாரமாக விளையாடிய பீற்றர்ஸன் சதமடித்து அசத்தினார். டெஸ்ட் போட்டிகளில் இது அவரது 11ஆவது சதமாகும். 129 ஓட்டங்கள்(12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) குவித்த பீற்றர்ஸன், சௌத்தியின் வேகத்தில் கௌவ்விடம் பிடி கொடுத்து வெளியேறினார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 240 ஓட்டங்கள் எடுத்திருந்தது. போர்ட் 42 ஓட்டங்களுடனும், சைட்பொற்றம் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டம்

நேற்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. களத்தில் நின்ற போர்ட் மேலதிக ஓட்டம் எதுவும் சேர்க்காமலும், சைட்பொற்றம் மேலதிகமாக 5 ஓட்டங்களும் சேர்த்த நிலையில் சௌத்தியின் பந்துவீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்தனர். தொடர்ந்து வந்த பனிஷர் ஒரு ஓட்டத்துடன் விக்கெட்டைப் பறிகொடுக்க இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸ் 253 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

தனது முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய ரிம் சௌத்தி 55 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். கிறிஸ் மாட்டின, ஜீற்றன் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடக்கிய நியூஸிலாந்து ஆரம்பத்திலேய சைட்பொற்றமின் வேகத்தில் ஆரம்பவீரரான மத்தியூ பெல்லை ஓட்டமெதுவும் பெறாமல் இழந்தது. தொடர்ந்து இணைந்த ஜிம்மி கௌவ் - ஸ்ரீபன் பிளெமிங் ஜோடி தம்மிடையே 102 ஓட்டங்களைச் சேர்த்து அணியை ஆரம்பச் சரிவிலிருந்து மீட்டெடுத்தனர். இந்நிலையில் பிளெமிங் 59 ஓட்டங்களுடன் சைட்பொற்றமின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். தொடர்ந்து மிரட்டிய சைட்பொற்றம், ஜிம்மி கௌவ்வையும் 44 ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் எவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடவில்லை. பின்வரிசை வீரர்களில் வெட்ரோறி மாத்திரம் அதிகபட்சமாக 14 ஓட்டங்களைச் சேர்த்தார். இறுதியில் நியூஸிலாந்து அணி 168 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 168 ஓட்டங்களை மட்டும் தனது முதல் இன்னிங்ஸில் பெற்றது. சிறப்பாகப் பந்துவீசிய சைட்பொற்றம் 47 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

85 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிவரும் இங்கிலாந்து அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேரம் முடிவடையும் போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 91 ஓட்டங்களைப் பெற்றிருந்து. ஸ்ரோரஸ் 42 ஓட்டங்களுடனும், பீற்றர்ஸன் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று மூன்றாம் நாள் ஆட்டம் தொடரும்.

# பாகிஸ்தானின் புதிய பிரதமராகிறார் ஜிலானி



இஸ்லாமாபாத், மார்ச் 24

பாகிஸ்தானின் புதிய பிரதமராக யூசுப் ஜிலானி தேர்வுசெய்யப்பட்டிருக்கிறார். நாடாளுமன்றத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் தேர்தலில் முறைப்படி அவர் தெரிவுசெய்யப்படுவார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மைப் பலம் கிடைக்காததால் பெனாஸிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும், நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கின்றன. இந்தக் கூட்டணி அரசின் பிரதமர் யார் என்பதில் கடந்த ஒரு மாதமாக நிலவிவந்த இழுபறி நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. பாகிஸ்தான் மக்கள் கட்சியில் தற்போது துணைத் தலைவராகப் பதவி வகித்துவருபவரும், பெனாஸிரின் விசுவாசியுமான சையது யூசுப் ரஸா ஜிலானி, புதிய பிரதமருக்கான வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

பிரதமர் பதவிக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்யும் கடைசி நாளான நேற்றுமுன்தினம் மாலை, அவருடைய பெயரைப் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பர்கதுல்லா பாபர் அறிவித்தார். இன்று திங்கட்கிழமை கூடும் பாகிஸ்தான் நாடாளுமன்றக் கூட்டத்தில் ஜிலானி பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டு, நாளை பதவியேற்றுக்கொள்கிறார்.

பாகிஸ்தான் நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகராகப் பணிபுரிந்த ஜிலானி, 1988ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பைத் தோற்கடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 3 அமெ. படையினர் ஈராக்கில் பலி

பாக்தாத், மார்ச் 24

வட பக்தாத்தில் நேற்றுமுன்தினம் வீதியோரக் குண்டுவெடிப்பில் சிக்கி மூன்று அமெரிக்க இராணுவ வீரர்கள் பலியானார்கள். இதனைத் தொடர்ந்து கடந்த ஐந்து வருடக்காலப் பிணக்கில், ஈராக்கில் உயிரிழந்த அமெரிக்கப் படை வீரர்களின் எண்ணிக்கை 4,000ஐ எட்டியதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகரின் வட மேற்கில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்த இராணுவ வீரர்களில் இருவர் அவ்விடத்திலேயே பலியாகிவிட்டனர். மூன்றாவது வீரர் கடுங்காயங்களால் சொற்ப நேரத்துக்குள் மரணித்துள்ளார் என அமெரிக்க இராணுவம் அதன் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

இவர்கள் பாக்தாத்திலுள்ள பல்தேசிய படைப் பிரிவைச் சேர்ந்தவர்களவர் என்றும் அது விளக்கியுள்ளது. இக்குண்டு வெடிப்பில் இரு ஈராக்கிய சிவிலியன்களும் மரணமானதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

பாக்தாத்துக்கு வடக்கே 60 மைல் தொலைவிலுள்ள சமராவில் நேற்றுமுன்தினம் இரு சோதனைச் சாவடிகள் மீது அமெரிக்க ஹெலிக்கொப்டரொன்று மேற்கொண்ட வான்வழித் தாக்குதல்களில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். இருவர் காயமுற்றனர் என ஈராக்கிய பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது.

## தான் உயிருடன் இருக்கும்வரை சிம்பாப்வேயின் ஆட்சி அதிகாரம் கைமாறாது என்கிறார் முகாபே

ஹராரே, மார்ச் 24

தான் உயிருடன் இருக்கும்வரை சிம்பாப்வேயின் ஆட்சி அதிகாரத்தை எதிர்க்கட்சிகள் கைப்பற்ற முடியாது என அந்நாட்டின் ஜனாதிபதி றொபேட் முகாபே கூறியுள்ளார்.

சிம்பாவ்வேயின் ஜனாதிபதியாக தொடர்ச்சியாக ஆறாவது தடவை பதவி வகிப்பதற்காக போட்டியிடும் 84 வயதான முகாபே, அந்த நாட்டிலுள்ள பிரிட்டிஷ் நிறுவனங்கள் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவளிக்கின்றன என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

மார்ச் 29ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் முகாபேயின் ஆட்சிக்கு மிகப்பெரும் சவாலாக அமையும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், எதிர்க்கட்சி அதிகாரத்தை கைப்பற்றுதற்கான வாய்ப்பை முகாபே நிராகரித்துள்ளார்.

சிம்பாப்வேயின் சுதந்திரத்தைத் திட்டமிட்ட நாங்கள் இருக்கும்வரை எதிர்கட்சி வெற்றிபெற முடியாது என தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டுள்ளார். சிம்பாப்வேயில் பிரிட்டனின் பிடி தொடர்வதற்கு எதிர்க்கட்சி உதவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வெள்ளை இனத்தவருக்குச் சொந்தமான நிலங்களை கறுப்பினத்தவரிடம் ஒப்படைப்பதைத் தடுப்பதற்காக பிரிட்டன் எதிர்க்கட்சிக்கு ஆதரவளிப்பதாகவும் முகாபே தெரிவித்துள்ளார்.

## பூட்டானில் இன்று நாடாளுமன்றத் தேர்தல்

திம்பு, மார்ச்.24

ஜனநாயகப் பாதைக்கு மாறும் பூட்டானில் இன்று முதன்முறையாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது.

இந்த தேர்தலைத் தொடர்ந்து பூட்டானில் கடந்த நூறாண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வந்த மன்னராட்சி முடிவுக்கு வந்து அங்கு ஜனநாயகம் மலருகிறது.

பூட்டானின் மன்னராக உள்ள ஜிக்மி கேசார் நாம்பில் வான்சுக், மக்கள் அனைவரும் கட்டாயம் வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் ஒவ்வொருவரும் வாக்குகளை பதிவு செய்து ஜனநாயகத்தை மலரச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பூட்டான் நாடாளுமன்றத்துக்கு 47 உறுப்பினர்கள் இன்று தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரண்டு முக்கிய கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

(ர)

# வெடிச்சத்தத்தால் இரத்மலானையில் பெரும் பதற்றம்

இரத்மலானை விமானப்படைத்தளத்தின் பாதுகாப்புக்காக புதைத்து வைக்கப்பட்டிருந்த சத்தவெடிகளில் ஒன்று நேற்றுக்காலை 6.50 மணியளவில் திடீரென வெடித்தமையினால் பெரும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டது.

புதைக்கப்பட்டிருந்த சத்தவெடியின் மேல் விலங்கினங்கள் சென்றமையினாலேயே வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்திருக்கிறார்.

விமானப் படைத்தளத்தின் பாதுகாப்புக் கருதி சுற்றிவர இத்தகைய சத்தவெடிகள் புதைத்துவைக்கப்பட்டுள்ளன. விமானப்படைத்தளத்திற்குள் உலாவித்திரியும் விலங்கினங்களினால் அடிக்கடி வெடிப்புக்கு உள்ளாகின்றன என்று இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## இலங்கை நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**இலங்கையில் ஆவணம் செவ்வாயன்று**

இது இவ்வாறிருக்க, சர்வதேச அளவில் மனித உரிமை நிலைவரம் குறித்துக் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டுள்ள இலங்கை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்திடம் சமர்ப்பிப்பதற்காக மனித உரிமைகள் குறித்த தேசிய செயற்றிட்டமொன்றை வகுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

செவ்வாய்க்கிழமை இந்த ஆவணத்தை இலங்கை கையளிக்கவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் ஆலோசனையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள இந்த செயற்றிட்டம் குறித்து எதிர்வரும் மே மாதத்தில் ஐ.நாவின் மனித உரிமைக் கவுன்ஸில் ஆராயவுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலில் இலங்கை தனது ஆசனத்தை இழக்கும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மே மாதத்தில் ஆசியாவிற்கான ஆசனத்திற்காக இலங்கை போட்டியிடும் வேளை ஐ.நா. அங்கத்துவ நாடுகளிடமிருந்து அதற்குப் போதிய ஆதரவு கிடைக்காமல் போகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# வெள்ளவத்தையில் சனி இரவு ஓட்டோச் சாரதி திடீர் மாயம்

கொழும்பு, வெள்ளவத்தை பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட ஓட்டோசாரதி ஒருவர் நேற்று முன்தினம்இரவு 11 மணியளவில்தொழிலின் நிமித்தம் வெளியே சென்ற பின்னர் மர்மமான முறையில் காணாமல் போயிருக்கின்றார். அவரது ஓட்டோ மட்டும் வெள்ளவத்தைக் கடற்கரையில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டிருக்கின்றது.

எட்வேர்ட் பிரேமானந்த (வயது- 27) என்ற ஓட்டோ சாரதியே மர்மமான முறையில் காணாமல் போயிருக்கின்றார்.

சம்பவதினம் இரவு ஓட்டோ சாரதியின் கையடக்கத் தொலைபேசிக்கு வந்த தொலைபேசி அழைப்பை அடுத்து அவர் வெளியே சென்றார் என்றும்- அதன் பின்னர் அவரைச் காணாது, அவரது தாயாரான சந்திரா மற்றும் மனைவியான குளோரிடா ஆகியோர் தேடிய போது அவரின் சிவப்பு நிற ஓட்டோ வெள்ளவத்தை கடற்கரையில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது என்றும் அவர்கள் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் முறைப்பாடு செய்திருக்கின்றனர். (சி)

## மன்னாரில் 10 புலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்கப்பட்ட பெண் போராளிகளின் சடலங்களில் சில நிர்வாணக் கோலத்தில் காணப்பட்டன என்றும் சடலங்கள் சிதைவடைந்துள்ளன என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலங்கள் உரிய தரப்புகளிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## கிழக்கிலிருந்து அதிரடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிரடிப்படையினர் முற்றாக வாபஸ் பெறப்படுகின்றனர் என ஊடகங்களில் வெளியாகிய செய்திகள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியவை. எந்த ஒரு கட்சியின் வேண்டுகோளின் பேரிலும் இந்த மாற்றங்கள் இடம்பெறவில்லை. இது நாட்டின் பாதுகாப்பு நன்மை கருதிய மாற்றமாகும்.

பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் சாதாரணமாக மேற்கொள்ளப்படும் மாற்றம்தான் இது.

விசேட அதிரடிப்படைத் தளபதி நிமல் லேவகே, மேல் மாகாண பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

இந்த மாற்றம் மேல் மாகாணத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையே தவிர ஊடகங்கள் செய்தி வெளியிட்டமைபோல் இது ஒரு திடீர் முடிவல்ல - என்றார் பொலிஸ்மா அதிபர்.

இதேவேளை-

ஊடகவியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய கருத்து தெரிவிக்கையில்-

அம்பாறையில் இருந்து மாற்றப்படும் அதிரடிப் படையினர் மிகவும் அனுபவம் பெற்றவர்கள். இவர்களது அனுபவமும் பயிற்சியும் நாட்டின் ஏனைய பகுதிகளின் பாதுகாப்புக்கும் தேவை - என்றார்.

# அதிரடிப்படையின் வெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குக் கிழக்கு மாகாணம் பிரிக்கப்படாமல் இருந்திருந்தால் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றவோ, அங்கு தேர்தலொன்றை நடத்துவதற்கோ அரசிற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமை அரசு வாக்குகளைக் கொள்ளையடிக்கப் போகின்றதோ என்ற சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

பிரிவினைவாதம் தோற்கடிப்பதற்கு முன்னரே அதிகாரப் பகிர்வினை முன்வைத்து கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் மாகாண சபையை ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பது அரசின் முட்டாள்தனமான முடிவாகும். அவ்வாறான நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இது பிரிவினை வாதத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கையாகும் எனக் கருதுகின்றோம்.

மக்களுக்கு ஜனநாயகத்தைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கில் அரசு கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தவில்லை. சர்வ கட்சி ஆலோசனைக் குழுவின் யோசனைகளின் பிரகாரமும் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் அழுத்தங்களுக்கு அமைவாகவும் அரசு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளது. அரசின் இந்த நடவடிக்கை அபாயகரமானது மட்டுமல்லது பிழையான அரசியல் முடிவாகும். இவ்வாறான முடிவினால் இறுதியில் பிரிவினை வாதிகள் சக்தியடைவதே பெறுபேறாக அமையும்.

தேசப்பற்றாளர்களின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு ஏமாந்து அரசு மாகாண சபையை ஏற்படுத்துமாயின் அதற்கெதிராக மாகாணசபைக்குள்ளேயே பிரிவினைவாதத்தைத் தோற்கடிப்பதற்காகப் போராட வேண்டி ஏற்படும்.

அதனால்தான் எதிர்காலத்தில் நடைபெறவிருக்கின்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஜே.வி.பி. போட்டியிடவுள்ளது.

மாகாண சபைக்குள்ளேயே சென்று பிரிவினைவாதத்தைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். நடைபெற்று முடிந்த மட்டக்களப்பு மாநகரசபை உள்ளிட்ட ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தலில் பிள்ளையான் குழுவின் ஆதரவுடன் அரசு போட்டியிட்டதுடன் மாநகரசபையிலும் வெற்றிபெற்றுள்ளது. இந்த நிலையிலேயே அரசு மாகாண சபையில் போட்டியிடுமாயின் அதிகாரத்திற்கு வருவதற்காக அதிகளவான சாத்தியக்கூறுகள் பிரிவினைவாதிகளுக்கே இருக்கின்றன.

ஜே.வி.பி., நீதிமன்றம் சென்றதன் மூலமாகவே ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் - 1987ஆம் ஆண்டு- சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணம் இப்போது பிரிக்கப்பட்டது. அதற்குப் பின்னரே கிழக்கு மாகாணம் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்டது. இவ்விரண்டுமே மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்தில் செயற்பாட்டின் மூலமாக ஏற்படுத்தப்பட்டவையல்ல. ஜே.வி.பியின் செயற்பாட்டினாலேயே இவை கைகூடின. அன்று வடக்குக் கிழக்குப் பிரிக்கப்படாமல் இருந்திருக்குமானால் பயங்கரவாதிகளிடமிருந்து கிழக்கை மீட்டு அங்கு ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசினால் முன்னெடுக்க முடிந்திருக்காது - என்றுள்ளது.

# தேர்தல் முடியும் வரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடகால எனது அனுபவத்தின் அடிப்படையில் சிறிய ஆலோசனையைத் தரும் தார்மீகக் கடப்பாடு எனக்கு உண்டு என நினைக்கிறேன்.

பிரச்சினைகளுக்குள் பிரச்சினை என்று பல்வேறு - எண்ணற்ற - சிக்கலுக்குள் நமது நாடு சிக்கியுள்ளது. அவை ஒன்றின் மீது ஒன்றாக ஐம்பது வருடங்களாகக் குவிந்துள்ளன. ஒரேநாளில் அவை தீர்க்கப்படக் கூடியவை அல்ல. ஒவ்வொன்றாகவே அவற்றைக் கையாளவேண்டும்.

**22 பேர் மோசடியாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள்**

இந்த நாடாளுமன்றமே சரியாகக் கூட்டப்படவில்லை என்று நான் கூறுவதை நீங்கள் மறுத்துரைக்க மாட்டீர்கள் என நான் நம்புகிறேன். 22 உறுப்பினர்கள் மோசடியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும்போது அதை நான் வேறு எப்படித்தான் விவரிப்பது? ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய அமைப்பு, 'பவ்ரல்', தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் அமைப்பு போன்றவற்றின் தேர்தல் கண்காணிப் பாளர்கள் இதற்குச் சான்று பகர்வார்கள்.

புலிகளின் தத்துவம் பெற்ற பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த 22 உறுப்பினர்களும்; புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள மக்கள் சாப்பிடவும், கொட்டாவி விடவும் தவிர வேறு சந்தர்ப்பங்களிலும் வாயைத் திறக்க முடியாதநிலையில் கிக்கியிருக்கக் கூடியதாக அங்கு இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து ஒரு வார்த்தையைக் கூடக் கூறாமல், உலகமெங்கும் சென்று புலிகள் பற்றியும் - ஏன் அவர்களின் அராஜகங்கள் குறித்தும் - புகழ்பாடி வருகின்றார்கள். புலிகளின் கட்டப்பாட்டில் உள்ள பிரதேசத்தில், இரும்புத் திரைக்குப் பின்னால் இடம்பெறும் அராஜகங்களைச் சரியாக அம்பலப்படுத்துவதில் அரசு கூடத் தவறிவிட்டது என்பேன்.

**அரசுக்கட்டுப்பாட்டுப் பகுதியிலும் மனிதஉரிமை மீறல்கள்**

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலும் அனேகளவில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றன. எனினும், அத்தகைய வன்செயல்களில் மறைமுகமான கைகள் உள்ளமையை மக்களுக்குத் தெரியும்.

சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் ஏற்பட்ட ஒரு கொலை தொடர்பாக விசாரிப்பதற்கு மக்கள் மத்தியில் ஆயுதமின்றிச் சென்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேயவர்த்தனாவுக்கு ஏற்பட்ட கதி உலக்குத் தெரியாமல் இருக்கலாம். யாழ். நகரிலிருந்து மூன்று மைல் தொலைவுக்குள் அவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இது நடந்து சில நிமிடங்களில் புலிகள் சார்பு தமிழ் இணையத்தளம் ஒன்று, இது பற்றிய படங்களை அப்பாவி மக்கள் மீது குற்றம் சுமத்தி வெளியிட்டது. யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகள் இல்லை. 90 வீதத்துக்கும் அதிகமானோர் சிங்கள அதிகாரிகளே. இத்தகைய சூழ்நிலையில் சரியாக விசாரணை நடத்தத் தவறியமைக்காக சிங்கள ப் பொலிஸ் அதி காரிகளை நாம் எப்படிக் குறை கூறமுடியும்?.

இதுவும், வடக்கு, கிழக்கில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்தமைக்கு ஒரு காரணமாகும்.

சுமார் 15 முதல் 20 வருடங்களின் பின்னர் சுதந்திரத்தின் காற்றை கிழக்கு மக்கள் அனுபவித்து சுவாசிக்க அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். வழமை நிலைமை திரும்ப முன்னரே - படுகொலைகள் கட்டுமட்டுமின்றித் தொடரும் நிலையில் மக்கள் பீதியில் ஆழ்ந்து கிடக்கப் பல்வேறு மீறல்களுக்கு யார் யார் காரணம் என்று மக்கள் அறிந்திருக்க, ஒரு கொலைச் சூத்திரதாரி கூட கைது செய்யப்படாத நிலையில் - உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கு நீங்கள் அழைப்பு விடுத்தீர்கள்.

ஒரு குழுவை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கு உதவுவது என்பது எமது பிரச்சினையல்ல. முதலில் அக்கட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறுவதற்கு தூண்டப்படவேண்டும்.

எல்லாவற்றையும் அவசர அவசரமாக்கச் செய்வதன் காரணமாக அரசு மீது மக்கள் குறை காண்கிறார்கள் என்பதை பெரும் மன ஆதங்கத்துடனும் ஆழ்ந்த கவலையுடனும் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வரு கிறோம்.

**ஆயுதக் குழுக்கள் நிராயுதபாணிகள் ஆக்கப்படவேண்டும்**

அரசு தற்போது ஒரு நடுவரைப் போல செயலாற்றித், தேர்தல்களை நடத்த வேண்டும். எதிர்வரும் தேர்தல்களில் தங்களின் கட்சி உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் போட்டியிட ஊக்குவிக்கப் படவேண்டும். அனைத்து ஆயுதக்குழுக்களும் நிராயுதபாணிகளாக்கப்படும் என்ற உறுதிமொழியோடு அனைத்து ஜனநாயக முறைமைகளும் பாதுகாக்கப்படுமென்ற உத்தரவாதத்தையும் அரசு அவற்றுக்கு அளிக்கவேண்டும்.

சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களை நடத்துவதற்கும், மக்கள் தாங்கள் தெரிவு செய்யும் நபருக்கும் கட்சிக்கும் வாக்களிப்பதற்கான தங்களின் ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்துவதற்குமான தங்களின் பணிக்கு எனது ஒத்துழைப்பு உண்டு.

அதேவேளை, தயவு கூர்ந்து தேர்தல்கள் முடிவடையும் வரை கிழக்கில் விசேட அதிரடிப் படையைத் தொடர்ந்திருக்க அனுமதிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். - என்றுள்ளது. (உ)

## சனியன்று நடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கொக்குத் தொடுவாய், ஜானகபுரப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமர்களில் விடுதலைப் புலிகளின் மூவர் உயிரிழந்தனர் என்றும் மோதலின் பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப் புலி உறுப்பினர் எனக் கருதப்படும் ஒருவரின் சடலத்தையும் விடுதலைப் புலிகளால் விட்டுச் சென்றவை எனக் கூற ப்படும் வெடிபொருள்களையும் தாங்கள் மீட்டனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் நாகர் கோவில் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமரில் தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

வவுனியா, கள்ளிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமரில் விடுதலைப் புலிகள் 13 பேர் வரை உயிரிழந்தனர் என்றும் தாக்குதலின் பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலில் விடுதலைப் புலிகளால் விட்டுச் சென்றவை எனக் கூறப்படும் வெடிபொருள்களைத் தாம் மீட்டனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மன்னார் இலந்தைவன் மற்றும் பறையனாளங்குளப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமர்களில் விடுதலைப்புலிகள் 25 பேர் வரை காயமடைந்தனர் என்றும் தமது தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்றும் தாக்குதலின் பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலின் போது விடுதலைப் புலிகள் எனக் கருதப்படுவோர் 11 பேரின் சடலங்களை தாம் மீட்டனர் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)


மேலைப்புலோலி சதாவதானி
நா. கதிரைவேற்பிள்ளை குருபூசைதினப் போட்டி - 2008

இடம் : சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலையம், தம்பசெட்டி, பருத்தித்துறை.
காலம் : 19.04.2008 சனி, 20.04.2008 ஞாயிறு

* போட்டிகள் *
பேச்சு, மனனம், பண்ணிசை (பாலர் வகுப்பு முதல் தரம் 5 வரை)
அவதானம், பொதுஅறிவு (தரம் 6 முதல் தரம் 11 வரை)
விண்ணப்ப முடிவுத்திகதி: 31.03.2008 தொடர்புகளுக்கு: 021 226 4563,3439
குறிப்பு: பாடசாலையூடாகவோ அல்லது நேரடியாகவோ போட்டியாளர்கள் தாம் விரும்பும் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
(நிகழ்வுகளில் மாற்றம் ஏற்படின் உதயன் பத்திரிகை மூலம் அறியத்தரப்படும்)
பரிசளிப்பு விழா: 20.04.2008, பி.ப 3.00 மணி
சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பசெட்டி, பருத்தித்துறை.
திரு.ப. சிவசுப்பிரமணியம் (செயலாளர்)

விற்பனைக்கு
Town ACE Toyota தொடரிலக்கமுடைய டீசல் Full தனிப்பட்ட பாவனையிலுள்ள வாகனம் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 155, 156, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
077 30[illegible]
021 2[illegible]5
(F/551957)

EXAM
Com.Maths
காலம்:- 25.03.2008
நேரம்:- 9.00-12.00am
By.B.Mayuran
NAVALAR, JAFFNA.

COM.MATHS
A/L 2010
திரிகோண கணிதம்
ஆரம்பம்:- 25.03.2008
(Tue. Wed 4.00-5.00pm)
By.B.Mayuran
NAVALAR, JAFFNA.

CHEMISTRY
பங்கீட்டு நுணுக்கம்
ஆரம்பம்:- 25.03.2008 (Tue)
இரசாயனசமநிலை
Paper Class
(Tue. Thur 1.00-2.00pm)
S.Vasu
NAVALAR, JAFFNA.

WE ARE NOT BIG BUT THE BEST விளம்பரப்படுத்தி உள்ள பொருட்கள் கையிருப்பிலுள்ளவை
Mother Boards
Intel Original 975 Multimedia Series
Intel Original Classic MM Series
Asus Intel 945 GC-MX & MX-SE
AsRock P4i65 Socket 478 DDR1
AsRock LGA DDR1 Core 2Duo Series
AsRock LGA DDR2 Conroe Series
BiosStar Socket 478 DDR2 Series
MSI LGA Core 2 Duo DDR2 Series
Processors
Intel Pentium 4 HT Series
Intel Pentium Dual Core Series
Intel Core 2 Duo Series
Intel Celeron D Dual Core Series
Rams
Kingston Value Rams DDR1 256 & 512
Kingston Value Rams DDR2 512 & 1Gb
SDRAM 64Mb, 128Mb & 256Mb
Keyboards from 500/-
Optical Mouses from 400/-
Speakers from 500/-
Woofers from 3000/-
ATX LGA Casings From 3750/-
Kingston 1Gb 800/-
Kingston 2Gb 1400/-
Kingston 4Gb 2300/-
Flash
ஏற்ற விலையில் உங்களுக்கு
Viewsonic / Samsung 15" CRT Rs.12500/-
Intenal & External TV Tuners,
IEEE1394 Firewire(DV3 Capture Cards)
Network Cables, Switches, Keystones
USB to Ps2, USB to Com Converters
USB Printer & Extensions (1m, 3m & 5m)
UNIT
மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720, 222 8844
Decide Yourself Where You Buy
Dealer & Bulk Enquries Requested
UNIPRO: Intel Pentium Dual Core 1.8Ghz, Intel 945 Chipset Mb,1Gb DDR2, 80Gb Hdd, DVD-RW, ATX Case, 15" Viewsonic/Samsung CRT, Keyboard, Mouse,Speaker & UPS
UNISTA: Intel Celeron D Dual Core 1.6Ghz, Intel 945 Chip Mb, King 512Mb DDR2, 80Gb Hdd, Combo, ATX Case, 15 Viewsonic/Samsung CRT Keyboard, Mouse,Speaker & UPS
UNIDOL: Intel PentiumD Dual Core 3.0/4m, Intel 945 Mb, King 1Gb DDR2, 160 Gb Hdd, DVD-RW SONY, ATX Case With, 17 Viewsonic/Samsung CRT , Keyboard, Mouse,Speaker & UPS
UNICOR: Intel Core2Duo 2.0/2.2, Intel 945 Chip Mb, King 1Gb DDR2, 160Gb Hdd, DVD-RW SONY, ATX Case With, 17 Viewsonic/Samsung CRT , Keyboard, Mouse,Speaker & UPS


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.